விலை: 50.00
பக்கங்கள் - 16
Website : www.valampurii.lk
Viber : 076 636 3378
Registered as a News Paper in Sri Lanka

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com
சங்கு 27
ஒலி 068 வள்ளுவர் ஆண்டு 2057 மாசி 13 புதன்கிழமை (25.02.2026) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829

கல்யாண மாலை
சர்வதேச இலவச திருமண சேவை


T.P: 021 720 1005
இல.144,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
kalyanamalai.jaffna@gmail.com
4000/= மட்டுமே

## ஒரு தசாப்தத்தை எட்டிய உறவுகளின் போராட்டம்



15ஆம் பக்கம் பார்க்க

## புலம்பெயர் தமிழர்கள் வடக்கில் முதலிட இலகு வழிகள் உண்டா?



### ஆளுநரிடம் கேள்வி எழுப்பிய பிரான்ஸ், ஜேர்மன் தூதுவர்கள்

(யாழ்ப்பாணம்)

புலம்பெயர் தமிழர்கள் வட மாகாணத்தில் முதலீடு மேற்கொள்ள இலகுவான வழிகள் ஏற்படுத்தப்பட்டுள்ளனவா? என


16ஆம் பக்கம் பார்க்க

### யாழ்ப்பாணம் மண்டைதீவில்

# சர்வதேச மைதான திட்டம் தொடரும்

## அமைச்சரவைப் பேச்சாளர் நளிந்த ஜயதிஸ்ஸ

(யாழ்ப்பாணம்)



யாழ்ப்பாணம் – மண்டைதீவுப் பகுதியில் சர்வதேச கிரிக்கெட் மைதானம் அமைக்கும் திட்டம் தொடர்ந்தும் முன்னெடுக்கப்படும் என்று அமைச்சரவைப் பேச்சாளரும் அமைச்சருமான நளிந்த ஜயதிஸ்ஸ உறுதிபடத் தெரிவித்தார்.

(16ஆம் பக்கம் பார்க்க)

உள்ளே...
தரிசனம்
I
யாழ்.போதனா வைத்தியசாலை

### எரிந்த நிலையில்

## வவுனியாவில் சடலம் மீட்பு

(வவுனியா)

வவுனியா ஈரப்பெரிய குளம்மயானத்திலிருந்து ஆண் ஒருவரின் சடலம் எரிந்த நிலையில் மீட்கப்

15ஆம் பக்கம் பார்க்க

## இராணுவத்தின் வர்த்தகத்தை தடை செய்க; பயங்கரவாதத் தடைச் சட்டத்தை நீக்குக

### பருத்தித்துறைப் பிரதேச சபையில் தீர்மானம்

(கரணவாய்)

பருத்தித்துறைப் பிரதேச சபை எல்லைக்குட்பட்ட பகுதிகளில் இராணுவத்தால் நடத்தப்படுகின்ற வர்த்தக நடவடிக்கைகளை தடை செய்ய வேண்டும், அரசால் கொண்டு வரப்படவிருக்கின்ற பயங்கரவாதத்திலிருந்து அரசைப் பாதுகாக்கும் புதிய சட்டம் கொண்டு வருவதை நிறுத்த வேண்டும். ஏற்கெனவே இருக்கின்ற பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தை நீக்க வேண்டும் என பருத்தித்துறைப் பிரதேச சபையில் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

பருத்தித்துறைப் பிரதேச சபையின் மாதாந்த அமர்வு

16ஆம் பக்கம் பார்க்க

## சுவாமி கைலாசானந்த் யாழ்ப்பாணம் விஜயம்



15ஆம் பக்கம் பார்க்க

### 30க்கு மேற்பட்ட

## மோ.சைக்கிள் கிளிநொச்சியில் பறிமுதல்

(கிளிநொச்சி)

கிளிநொச்சி பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட A9 பிரதான வீதியில் 24 மணி நேரத்தில் பொலிஸார்

15ஆம் பக்கம் பார்க்க

## யாழ்ப்பாணம் பொருளாதார மத்திய நிலையத்தை

### மேம்படுத்தல் தொடர்பான கலந்துரையாடல்



15ஆம் பக்கம் பார்க்க

## கிவுல் ஓயாத் திட்டம் அபாயத்தின் குறியீடா?

### யாழில் கலந்துரையாடல்

(யாழ்ப்பாணம்)

கிவுல் ஓயாத் திட்டம் அபாயத்தின் குறியீடா எனும் தலைப்பில் யாழில் நேற்று கலந்துரையாடல் ஒன்று இடம்பெற்றுள்ளது.

யாழ்.ஊடக அமையத்தின் ஏற்பாட்டில் இடம்பெற்ற இக்கலந்துரையாடலில் பாராளுமன்ற உறுப்பினர்களான கஜேந்திரகுமார்

15ஆம் பக்கம் பார்க்க

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடுவு நிலை தவறாத நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

## பெறுகை அறிவித்தல்

**பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனை, கிளிநொச்சி**
**சமைத்த மற்றும் உலர் உணவுகள் வழங்கலுக்கான**
**பெறுகைகள் - 2026 / 27**

1. தலைவர், பிராந்திய பெறுகைக்குழு, பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனை, கிளிநொச்சி அவர்கள், கீழ்வரும் வைத்திய சாலைகளுக்கான உலர் உணவுகள் மற்றும் சமைத்த உணவுகள் வழங்குவதற்கு இப்போது தகவுடையோரும் தகைமை பெற்றவருமான கேள்வியாளர்களிடம் இருந்து குறியீடு செய்யப்பட்ட விலைக் கேள்விகளைக் கோருகின்றார்.
2. பெறுகை கோரலானது தேசிய போட்டி விலை பெறுகை முறைப்படி தனித் தனியாக மேற்கொள்ளப்படும்.
3. ஒப்பந்த அளிப்பு செய்வதற்கு, வெற்றிகரமான விலைமனுதாரர் கறுப் புப்பட்டியலில் இடம்பெறலாகாது என்பதுடன் பின்வரும் தேவைப் பாடுகளையும் கொண்டிருத்தல் வேண்டும்.
   அ. விலைமனுதாரர் வலிதான வியாபாரப் பதிவினைக் கொண்டிருத்தல் வேண்டும்.
   ஆ. அத்துடன், வடக்கு மாகாணத்தில் தனது பதிவு செய்யப்பட்ட அலுவலகம் அல்லது கிளையினைக் கொண்டிருத்தல் வேண்டும்.
4. ஒப்பந்த அளிப்பிற்கு தகைமை பெறுவதற்கு விலைமனுதாரர்கள் பகுதி 2 பெறுகைத் தரவில் குறிப்பிடப்பட்ட ஆகக் குறைந்த அடிப்படைத் தகைமைகளைக் கொண்டிருத்தல் வேண்டும்.
5. அக்கறை கொண்டுள்ள கேள்வியாளர்கள் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனை, A 09 வீதி, கிளிநொச்சி, (தொலைபேசி இல 0212285932/ 0212225719) அவர்களிடமிருந்து மேலதிக தகவலைப் பெறலாம் என்பதுடன், இம் முகவரியில் காலை 09.00 மணியிலிருந்து பிற்பகல் 15.00 மணிவரை கேள்வி ஆவணங்களை பரிசோதனை செய்யலாம்.
6. அக்கறை கொண்டுள்ள கேள்வியாளர்களினால் ஆங்கிலமொழியிலான கேள்வி ஆவணங்களின் பூரணமான தொகுதியொன்றை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனை, A 09 வீதி, கிளிநொச்சி எனும் முகவரியில் எழுத்து மூலமான விண்ணப்பமொன்றை சமர்ப்பித்து **25.02.2026** ஆந் திகதி முதல் **17.03.2026** ஆந் திகதி வரை மு.ப 09.00 மணி தொடக்கம் பி.ப 15.00 மணி வரையான காலப்பகுதியில் கீழ்வரும் அட்டவணையில் கூறப்பட்டுள்ள மீளளிக்கப்படாத தொகையினை கட்டணமாக செலுத்தி பெற்றுக்கொள்ளலாம்.
7. **11.03.2026** ஆந் திகதியன்று முற்பகல் 10.30 மணிக்கு கேள்வியாளர்களுக்கான பெறுகை நடைமுறைமுறைகள் தொடர்பான முன் கூட்டம் (pre-bid meeting) எமது அலுவலகத்தில் நடைபெறும். அக்கறை கொண்டுள்ள கேள்வியாளர்கள் தவறாமல் கலந்துகொள்வது அவசியம்.
8. கேள்விகள் யாவும் 17.03.2026 ஆந் திகதியன்று முற்பகல் 10.30 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியதாக தலைவர், கிளிநொச்சி பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனையின், கண்டி வீதி, கிளிநொச்சி முகவரியில் நேரடியாகவோ அல்லது பதிவுத்தபால் மூலமாகவோ இரு பிரதிகளில் நிதிக்கிளையில் காணப்படும் பெறுகைப் பெட்டியினுள் இடலாம். காலந்தாழ்த்தப்பட்ட கேள்விகள் யாவும் நிராகரிக்கப்படும். கேள்விதாரர்கள் ஒவ்வொரு பெறுகைக்குமான இலக்கத்தினை தபாலுறையின் இடதுபக்கமேல் மூலையில் குறிப்பிடுதல் வேண்டும். கேள்விகள் யாவும் **17.03.2026** ஆந் திகதி முற்பகல் 10.30 மணிக்கு திறக்கப்படும்.
9. கீழே அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு கேள்விப் பிணைப்பணம் (Bid Security) ஒவ்வொரு பெறுகைக்கும் தனித் தனியாக செலுத்தப்படல் வேண்டும்.
10. இவ் விலைமனுக்கோரலை முழுமையாகவோ அல்லது பகுதியாகவோ அல்லது எந்தவொரு நிலையிலுமோ இப்பூரண நடவடிக்கையிலிருந்து எவருக்கும் நட்டஈடு எதுவும் செலுத்தாமலே இவ்விலைமனுகோரலை இரத்துச் செய்வதற்கு பெறுகைக்குழு தலைவருக்கு பூரண அதிகாரம் உண்டு.

| இல | விபரங்கள் | குறிப்பீட்டு இலக்கம் | பெறுகைப் பிணைத் தொகை | பெறுகைப் பிணைத் தொகை செல்லுபடிக் காலம் | மீளளிக்கப்படாத வைப்பு |
|---|---|---|---|---|---|
| 01 | ஆதார வைத்தியசாலை முழங்காவில் | NP/04/45/RDHS-KOC/DF/BH-MUL/ 2026/27/01 | ரூபா.45,000.00 | 14.07.2026 | ரூபா.3000.00 |
| 02 | பிரதேச வைத்தியசாலை அக்கராயன்குளம் | NP/04/45/RDHS-KOC/CM/AKK/ 2026/27/02 | ரூபா.40,000.00 | 14.07.2026 | ரூபா.3000.00 |
| 03 | பிரதேச வைத்தியசாலை பூநகரி. | NP/04/45/RDHS-KOC/CM/POO/ 2026/27/03 | ரூபா.40,000.00 | 14.07.2026 | ரூபா.3000.00 |
| 04 | பிரதேச வைத்தியசாலை தர்மபுரம் | NP/04/45/RDHS-KOC/CM/THAR/ 2026/27/04 | ரூபா.60,000.00 | 14.07.2026 | ரூபா.3000.00 |
| 05 | பிரதேச வைத்தியசாலை உருத்திரபுரம். | NP/04/45/RDHS-KOC/CM/URUT/ 2026/27/05 | ரூபா.15,000.00 | 14.07.2026 | ரூபா.2500.00 |
| 06 | பிரதேச வைத்தியசாலை வட்டக்கச்சி | NP/04/45/RDHS-KOC/CM/VADD/ 2026/27/06 | ரூபா.15,000.00 | 14.07.2026 | ரூபா.2500.00 |
| 07 | பிரதேச வைத்தியசாலை வேரவில். | NP/04/45/RDHS-KOC/CM/VER/ 2026/27/07 | ரூபா.25,000.00 | 14.07.2026 | ரூபா.2500.00 |
| 08 | பிரதேச வைத்தியசாலை பளை | NP/04/45/RDHS-KOC/CM/PALA/ 2026/27/08 | ரூபா.25,000.00 | 14.07.2026 | ரூபா.2500.00 |


**தலைவர்,**
**பிராந்திய பெறுகைக் குழு,**
**பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனை,**
**கிளிநொச்சி.**

**TP: 021 228 5719, Fax: 021 228 5931**
**Email - rdhskoc@gmail.com, financerdhskoc@gmail.com**

(C-5051)

---

## 3 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



பிள்ளையாய் மடியில் 08-08-1942

மங்கள விநாயகர் அடியில் 28-02-2023

### அமரர். திரு. வேலுப்பிள்ளை செல்வரத்தினம் (இரத்தினம்)

(உப்பு வல்லை ஸ்ரீ மங்கள விநாயகர் ஆலயம், சிறிதேவி சைவ உணவகம், சிறிதேவி பழக்கடை உரிமையாளரும்)

திதி - பூர்வபக்க நவமி 25.02.2026

மறைந்தும் மறையாது என்றென்றும்
எம் மனங்களில் நிறைந்தவர் அப்பா!
கண்முன்னே வாழ்ந்த காலம் கண்ணிமைக்கும் நேரத்தில்
கனவாகிப் போனதே அப்பா!
மூன்றாண்டுகள் கழிந்தாலும் உங்கள் நினைவே நிழலாய்
அமைந்து விட்டதே அப்பா!
இறை தொண்டில் உங்களை அர்ப்பணித்தீர்கள் இதுவே
போதும் என்று உப்பு வல்லை ஸ்ரீ மங்கள விநாயகர்
ஆட்கொண்டரோ உங்களை!

சிறிதேவி பழக்கடை,
மந்திகை புலோலி தெற்கு புலோலி.

குடும்பத்தினர்

C-5050

---


யாழ் மாவட்ட இசைக்குழுக்கலைஞர் சங்கம் நடாத்தும்

## மாபெரும் இசைத்திருவிழா

# Carnival Music Festival

CARNIVAL MUSIC FESTIVAL

வலம்புரி - அச்சு ஊடக அனுசரணை
சூரியன் FM 103.6 103.4 - ஊடக அனுசரணை
Media Mathi - சமூக வலைத்தள இணைப்பு
KM creations studio - ஒளிப்பதிவு அனுசரணை

காங்கேசன் துறை உல்லாசக் கடற்கரை பிரதேச சபை மைதானம்

Time 2 PM to 1 AM

முதற் தடவையாக
யாழ் முன்னணி இசைக்குழுக்கள் ஒரே மேடையில்
சங்கமிக்கும் பிரம்மாண்ட தொடரிசை நிகழ்ச்சிகள்

| MARCH 06 | MARCH 07 | MARCH 08 |
|---|---|---|
| அருணா<br>சண்<br>S.G.சாந்தன்<br>நியூ ஆனந் | யாழ் ராகம்ஸ்<br>சிம்பொனி<br>சுருதிலயா<br>சண்சுருதி | ப்ரண்ட்ஸ்<br>யாழ் ரியூன்ஸ்<br>எஸ். என் மியூசிக்<br>சாரங்கா |

ஒலி அமைப்பு
SMS SRI MURUGAN
MESIYA SOUND
MOHAN Sounds Jaffna

பிரவேசம்
பெரியோர்:200/=
சிறுவர்:100/=

DIAMOND SPONSOR
FineMart Stylish

மேலதிக தகவல்களுக்கு 077 227 1142 077 205 1992 077 280 4865

DIAMOND SPONSOR
விஜிதா VIJITHA
Trade Mark No - 5532

முத்துமாரி
வசந்தம் சுப்பமாக்கற்
VASANTHAM FOOD (PVT) LTD


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புதிய பயங்கரவாத தடைச்சட்டமூலம் திருத்தப்படாவிடின் ஜி.எஸ்.பி.பிளஸ் வரிச்சலுகை பாதிக்கப்படலாம்!

## இலங்கைக்கு ஐரோப்பிய ஒன்றியம் அழுத்தம்

**(கொழும்பு)**

**இலங்கையில் அறிமுகப்படுத்தப்படவுள்ள புதிய பயங்கரவாத எதிர்ப்புச் சட்டமூலத்தில் 'பயங்கரவாதம்' என்பதற்கான வரைவிலக்கணத்தை சர்வதேச தரத்திற்கு அமையக் குறைக்குமாறு ஐரோப்பிய ஒன்றியம் இலங்கை அரசுக்குக் கடும் அழுத்தம் கொடுத்துள்ளது.**

சர்ச்சைக்குரிய பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்திற்கு மாற்றீடாகக் கொண்டுவரப்படும் இந்தப் புதிய சட்டமூலம் குறித்து ஐரோப்பிய ஒன்றியம் முன்வைத்துள்ள பிரதான பரிந்துரைகள் வருமாறு.

தற்போதைய வரைவுத் திட்டத்தில் 'பயங்கரவாதம்' என்பது மிகவும் விரிவாகவும், தெளிவற்ற முறையிலும் வரையறுக்கப்பட்டுள்ளது. இது ஜனநாயக ரீதியிலான அமைதிப் போராட்டங்கள், சிவில் சமூகச் செயற்பாடுகள் மற்றும் மாற்று அரசியல் கருத்துக்களைக் கூட 'பயங்கரவாதக் குற்றங்களாக' வகைப்படுத்த வழிவகுக்கும் என ஐரோப்பிய ஒன்றியம் சுட்டிக்காட்டியுள்ளது. எனவே, இதனைத் துல்லியமான சர்வதேச நெறிமுறைகளுக்கு ஏற்பச் சுருக்குவது அவசியம்.

இலங்கையின் ஏற்றுமதித் துறைக்கு மிக அவசியமான ஜி.எஸ்.பி. பிளஸ் வரிச்சலுகையைத் தொடர்ந்து பெறுவதற்கு, மனித உரிமைகளைப் பாதுகாக்கும் வகையிலான சர்வதேச தரத்திலான பயங்கரவாத எதிர்ப்புச் சட்டத்தைக் கொண்டுவருவது ஒரு முக்கிய நிபந்தனையாகும். சட்டத்தில் மாற்றங்கள் செய்யப்படாவிடின் இந்தச் சலுகை பாதிக்கப்படலாம் என்ற எச்சரிக்கையும் மறைமுகமாக விடுக்கப்பட்டுள்ளது.

முன்னைய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அரசின் சட்டமூலத்தைத் தவிர்த்து, ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க தலைமையிலான தற்போதைய அரசு புதிய பயங்கரவாத எதிர்ப்புச் சட்டமூலம் குறித்துப் பொதுமக்களின் கருத்துக்களைக் கோரியுள்ளது.

சர்வதேச அழுத்தங்களைத் தொடர்ந்து, தற்போது நீதி அமைச்சு பயங்கரவாதக் குற்றங்களின் பட்டியலை மீளாய்வு செய்து வரைவிலக்கணத்தைச் சுருக்கும் பணிகளைத் தீவிரப்படுத்தியுள்ளது.

குறிப்பாக, தடுத்து வைப்பு அதிகாரங்கள் மற்றும் நிறைவேற்று அதிகாரங்கள் புதிய சட்டத்தில் எவ்வாறு மாற்றியமைக்கப்படும் என்பதை சிவில் சமூக அமைப்புகளும், சர்வதேச மனித உரிமை அமைப்புகளும் உன்னிப்பாகக் கண்காணித்து வருகின்றன. (நி)





Company Registration Number - PB 286362

### 246 சுப பெத்தும் புலமைப்பரிசில்கள்

2024 ஆம் ஆண்டின் தரம் 5 புலமைப்பரிசில், கா.பொ.த. சாதாரண தரம் மற்றும் உயர்தரப் பரீட்சைகளில் சிறப்புர சித்தியடைந்த பிள்ளைகளுக்கு 246 சுப பெத்தும் புலமைப்பரிசில்கள் வழங்கப்படும்.

2024 தரம் 5 புலமைப்பரிசில், கா.பொ.த. சாதாரண தரம் மற்றும் உயர்தரத்தில் சித்தி எய்திய SLIC லைஃப் காப்புறுதிதாரர்களின் பிள்ளைகள் மற்றும்

2024 கா.பொ.த. உயர்தரப் பரீட்சையில் நாடளாவிய ரீதியில் 1, 2 மற்றும் 3ஆம் இடத்தை வென்ற பிள்ளைகள் அனைவரும்

www.sliclife.com இணையதளத்தின் ஊடாக இன்றே விண்ணப்பியுங்கள்.

| ஸ்ரீ லங்கா இன்ஷுரன்ஸ் லைஃப் ஆயுள் காப்புறுதி ஒப்பந்ததாரர்களின் பிள்ளைகளுக்கு | | | 2024 கா.பொ.த. உயர்தரப் பரீட்சையில் நாடளாவிய ரீதியில் 1, 2 மற்றும் 3ஆம் இடத்தை வென்ற அனைத்து பிள்ளைகளுக்கும் |
|---|---|---|---|
| தரம் 5 புலமைப்பரிசில் | க.பொ.த. சாதாரண தரம் | க.பொ.த. உயர் தரம் | ரூ .150,000 (ஒருமுறை கட்டணம்) |
| வருடாந்தம் ரூ. 20,000 வீதம் 5 வருடங்கள் | வருடாந்தம் ரூ. 40,000 வீதம் 2 வருடங்கள் | வருடாந்தம் ரூ. 50,000 வீதம் 3 வருடங்கள் | |

2026 மார்ச் 31ம் திகதிக்கு முன்னர் விண்ணப்பிக்கவும்.
விண்ணப்பதாரர்களில் தேர்ந்தெடுக்கப்படும் சிறப்பு வெற்றியாளர்களுக்கு சுப பெத்தும் புலமைப்பரிசில்கள் வழங்கப்படும்.
மேலதிக தகவல்களுக்கு உங்கள் காப்புறுதி ஆலோசகர் அல்லது 1377 அழையுங்கள்.

SLIC ஸ்ரீ லங்கா இன்ஷுரன்ஸ் LIFE

*நிபந்தனைகளுக்கு உட்பட்டது. SLIC லைஃப் இலங்கை காப்பீட்டு ஒழுங்குமுறை ஆணைக்குழுவால் உரிமம் பெற்ற நிறுவனமாகும் (C-427)


## நாய்களுக்கான; தடுப்பூசி ஏற்றலுக்கு கட்டணம் இல்லை

(யாழ்ப்பாணம்)

நாய்களுக்கான விலங்கு விசர் நோய் தடுப்பூசி ஏற்றலுக்கு கட்டணம் எதுவும் அறிவிடப்படுவதில்லை. மாநகர சபைக்குரிய வளர்ப்பு நாய்களுக்கான உரிமக் கட்டணமாகவே 100 ரூபாய் அறவிடப்படுகிறது என யாழ்.மாநகர சபை சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையினர் தெரிவித்துள்ளனர். (8)

## நிர்வாக சபைத் தெரிவு

(கரணவாய்)

வல்வெட்டித்துறை இரத்ததான சங்கத்தின் புதிய நிர்வாக சபைத் தெரிவு அண்மையில் இடம்பெற்றது.

நிகழ்வில் தலைவராக பாலச்சந்திரமூர்த்தி வீரசுரேந்திரன், செயலாளராக விமல்ராஜ் ஜெயதர்சினி, பொருளாளராக சுமணன் மேனகா ஆகியோர் தெரிவு செய்யப்பட்டனர். (8-60)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ராஜபக்ஷக்களின் அரசியலுக்கு சர்வதேசம் வழங்கிய பதிலடி!

## நீதி அமைச்சர் பகிரங்கம்



**(கொழும்பு)**

**லண்டனுக்கு விஜயம் செய்துள்ள பாராளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷவின் உரைகள் அடுத்தடுத்து இரத்துச் செய்யப்பட்டமையானது, கடந்த காலங்களில் ராஜபக்ஷ குடும்பத்தினர் முன்னெடுத்த அரசியலுக்கு சர்வதேச சமூகம் வழங்கிய பதிலடி என்று நீதி அமைச்சர் ஹர்ஷன நாணயக்கார தெரிவித்துள்ளார்.**

இது குறித்து ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவித்த அவர் மேலும் குறிப்பிட்டதாவது,

நாமல் ராஜபக்ஷ போன்றவர்கள் இலங்கையில் எத்தகைய அரசியலை முன்னெடுத்தார்கள் என்பதை உலகம் இன்று நன்கு அறிந்து வைத்துள்ளது.

சர்வதேச சமூகம் இப்போது மிகவும் விழிப்புடன் இருக்கின்றது.

அதன் விளைவாகவே, கேம்பிரிட்ஜ் மற்றும் ஒக்ஸ்போர்ட் போன்ற புகழ்பெற்ற பல்கலைக்கழகங்கள் அவருக்கு இடமளிக்க மறுத்துள்ளன.

ராஜபக்ஷக்களின் ஆட்சிக் காலத்தில் ஜனநாயகம் மற்றும் மனித உரிமைகள் கையாளப்பட்ட விதம் குறித்து சர்வதேச மாணவர்கள் மற்றும் சிவில் சமூகத்தினர் மத்தியில் பாரிய விரக்தி நிலவுகின்றது. இந்த அதிருப்தியே நாமலின் உரைகள் இரத்துச் செய்யப்பட்டமைக்குப் பிரதான காரணமாகும்.

கேள்விகளுக்குப் பயப்படுபவர்கள் அல்லது மற்றவர்கள் கேள்வி கேட்கும் சூழலை உருவாக்காதவர்கள், இத்தகைய உயரிய கல்வி நிறுவனங்களில் உரையாற்றத் தகுதியற்றவர்கள்.

ஒரு ஜனநாயக நாட்டில் இது போன்ற எதிர்ப்புகள் எழும் போது, அந்த நாட்டு கல்வி நிறுவனங்கள் அதற்கு மதிப்பளிப்பது இயல்பான ஒன்றாகும். லண்டன் பல்கலைக்கழக மாணவர்கள் தமது பாதுகாப்பு மற்றும் சுதந்திரமான விவாதம் குறித்து கவலை தெரிவித்தது முற்றிலும் நியாயமானது.

கடந்த கால கசப்பான அனுபவங்களே இத்தகைய போராட்டங்களுக்கு அடிப்படையாக அமைந்துள்ளன. (நி)

# சைவ சித்தாந்த ஆய்வு மாநாடு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணப் பல்கலைக் கழக, இந்துக் கற்கைகள் பீட சைவ சித்தாந்த துறையும், உயர் பட்டப் படிப்புகள் பீடமும் இணைந்து நடத்தும் முதலாவது சர்வதேச சைவ சித்தாந்த ஆய்வு மாநாடு எதிர்வரும் 27, 28 ஆகிய இரு தினங்களில் நடைபெறவுளளது.

ஆரம்ப நாள் நிகழ்வு எதிர்வரும் 27ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை 9 மணிக்கு யாழ்.பல்கலைக் கழக மருத்துவ பீடக் கூவர் கலையரங்கில் இடம்பெறவுள்ளது.

யாழ். பல்கலைக்கழக உயர்பட்டப் படிப்புகள் பீட பீடாதிபதி சிரேஷ்ட பேராசிரியர் தி.வேல்நம்பி தலைமையில் நடைபெறும் இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். பல்கலைக்கழகத் துணைவேந்தர் பேராசிரியர் சி.சிறிசற்குணராசா கலந்து சிறப்பிக்கவுள்ளார்.

நிகழ்வில் ஆதார சுருதியுரை சென்னைப் பல்கழைக் கழக சைவ சித்தாந்தத் துறை தலைவர் பேராசிரியர் நல்லூர். சா.சரவணன் வழங்கவுள்ளார். (8)

# ஜெனீவாவில் காட்சிப்படுத்தப்பட்டுள்ள போர்க்குற்றப் புகைப்படங்கள்



(ஜெனீவா)

ஈழத்தமிழர்களுக்கு இழைக்கப்பட்ட அநீதிகளுக்குச் சர்வதேச சமூகத்திடம் நீதி கோரி ஜெனீவா ஐ.நா திடலில் கவனயீர்ப்பு நிகழ்வுகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் 61ஆவது கூட்டத்தொடர், சுவிட்சர்லாந்தின் ஜெனீவா நகரில் நேற்று முன்தினம் ஆரம்பமாகியுள்ளது.

இதனை முன்னிட்டு மேற்படி நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டுள்ளது.


ஈழத்தமிழர்களுக்கான நீதியையும், சர்வதேச விசாரணையையும் வலியுறுத்தி இத்தகைய போராட்டங்கள் ஜெனீவாவில் தொடர்ந்து 14ஆவது ஆண்டாக முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

இந்தநிலையில், ஐ.நா வளாகத்தின் முன் அமைந்துள்ள திடலில், இலங்கையில் நடைபெற்ற போர்க்குற்றங்கள், கடத்தல்கள், மனித உரிமை மீறல்கள் மற்றும் கொல்லப்பட்ட ஊடகவியலாளர்களின் புகைப்படங்கள் காட்சிப்படுத்தப்பட்டுள்ளன.

இலங்கை இராணுவத்தினரால் தமிழ் மக்கள் மீது நடத்தப்பட்ட இனப்படுகொலையின் கோர முகத்தை உலகுக்கு உணர்த்தும் சாட்சியங்களாக இவை அமைந்துள்ளன.

இந்தநிலையில், இனப்படுகொலைக் குற்றச்சாட்டுகளுக்குச் சர்வதேச விசாரணை கோரியும், பாதிக்கப்பட்ட மக்களுக்குப் பரிகார நீதி வேண்டியும் அங்கு கூடியுள்ள புலம்பெயர் மக்கள் மற்றும் ஆர்வலர்கள் முழக்கங்களை எழுப்பியுள்ளனர். (நி)

# நிலக்கரியில் ஊழல் என்பதற்காக ஒட்டுமொத்த அரசாங்கத்தையும் குறை கூறுவது தவறு வாசுதேவ



(கொழும்பு)

நிலக்கரியில் ஊழல் என்பதற்காக ஒட்டுமொத்த அரசாங்கத்தையும் குறை கூறுவது தவறு என முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் வாசுதேவ நாணயக்கார தெரிவித்துள்ளார்.

கொழும்பில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

ஒரு குறிப்பிட்ட திணைக்களத் தலைவர் அல்லது அமைச்சரால் செய்யப்படும் தவறுகளுக்காக ஒட்டுமொத்த அரசாங்கத்தையும் குறை கூறுவது நியாயமற்றதாகும். தற்போதைய நிலக்கரி விவகாரத்தில் பொறுப்பான அமைச்சர் முறையாகச் செயற்பட்டாரா என்பது குறித்து கவலைகள் எழுப்பப்பட்டுள்ளன. அமைச்சரின் தோல்விக்கு அவரே பொறுப்பேற்க வேண்டுமா அல்லது அமைச்சரவை அந்தப் பொறுப்பைப் பகிர்ந்துகொள்ள வேண்டுமா என்பதை அமைச்சரவை தீர்மானிக்க வேண்டும். தரமற்ற நிலக்கரி அதிக விலைக்கு நாட்டிற்கு இறக்குமதி செய்யப்பட்டதாகக் கூறப்படுகிறது.

இதன் விளைவாக, மின் உற்பத்திக்காகத் தேவையானதைவிட அதிக அளவிலான நிலக்கரி பயன்படுத்தப்பட வேண்டியுள்ளது.

இந்தச் சூழல் மின்சார சபையின் நிலக்கரி மின் உற்பத்தி நிலையங்களுக்குப் பாரிய நிதி இழப்பை ஏற்படுத்தியுள்ளது.

இந்த இழப்புகளை வழங்குநர் மீதான அபராதங்கள் மூலம் ஈடுசெய்ய முடியும் எனக் கூறப்பட்டாலும், அது நீண்டகாலம் எடுக்கும் ஒரு செயல்முறையாகும்.

இந்த அபராதங்கள் தீர்க்கப்படுவதற்குள், உடனடி பாதிப்புகள் ஏற்கனவே ஏற்பட்டிருக்கும்.

இந்த இழப்புகளை ஈடுகட்டுவதற்காக மின்சார சபை நுகர்வோருக்கான மின்சாரக் கட்டணத்தை உயர்த்த முயல்கிறது. இதனை ஏற்றுக்கொள்ள முடியாது என அவர் தெரிவித்தார். (நி)

# இந்த வருடம் 31 ஆயிரம் வீடுகள் நிர்மாணிக்கத் திட்டம்

(கொழும்பு)

இந்த வருட வீடமைப்புத் திட்டத்தின் கீழ் 31,000 வீடுகளை நிர்மாணிக்கத் திட்டமிட்டுள்ளதாக வீடமைப்பு நிர்மாணத்துறை மற்றும் நீர் வழங்கல் அமைச்சர் கலாநிதி சுசில் ரணசிங்க தெரிவித்துள்ளார்.

"தமக்கென ஓரிடம் அழகான வாழ்க்கை" எனும் தொனிப் பொருளின் கீழ் 2026 தேசிய வீடமைப்புத் திட்டம் இன்று ஆரம்பிக்கப்படவுள்ளதாக அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

13 மாவட்டங்களை உள்ளடக்கிய வகையில் இந்த வீடமைப்பு நிர்மாணத் திட்டம் நடைமுறைப்படுத்தப்படும் என்றும் அமைச்சர் சுசில் ரணசிங்க குறிப்பிட்டுள்ளார்.

மேலும் கருத்துத் தெரிவித்த அவர்,

"இந்த வருடம் 2026 திட்டத்தின் கீழ் 31,000 வீடுகளை நிர்மாணிக்கத் திட்டமிட்டுள்ளோம். இதில் சுமார் 25,000 வீடுகள் நேரடி உதவியின் கீழேயே நிர்மாணிக்கப்படவுள்ளன. தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபையின் கீழ் சுமார் 10,000 குடும்பங்களுக்கு வீடமைப்பு நிதியுதவி வழங்க நடவடிக்கை எடுத்துள்ளோம். இதற்காக 10,000 மில்லியன் ஒதுக்கப்பட்டுள்ளது.

வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபையின் கீழ் ஒரு குடும்பத்திற்கு ஒரு மில்லியன் ரூபாய் வீதம் மானியம் வழங்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

இது ஒருவரது சொந்த வீட்டை அமைத்துக் கொள்வதற்காக வழங்கப்படும் மீள அறவிடப்படாத ஒரு நிதியுதவியாகும். பெப்ரவரி 25ஆம் திகதி 13 மாவட்டங்களில் 1,500 குடும்பங்களுக்கு 1,500 வீடுகளை நிர்மாணிப்பதற்காக 1,500 மில்லியன் ரூபாய் பெறுமதியான காசோலைகளை வழங்கும் பணிகள் ஆரம்பமாகும்." எனத் தெரிவித்தார். (நி)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# "யாழ்ப்பாண பிரதேச கலைஞர்களுக்கான ஊக்குவிப்பு நிதி வழங்குதல்"

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாண பிரதேச செயலர் பிரிவில் வாழ்ந்து வருகின்ற கலைஞர்கள், எழுத்தாளர்களின் படைப்புக்கான நூல்கள் மற்றும் இலத்திரனியல் வெளியீடுகளை ஊக்குவிப்பதற்கான நிதி உதவிகளை வழங்குவதற்கு வடக்கு மாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தின் கலாசார செயற்றிட்டத்தின் 2026 ஆம் ஆண்டின் நிதி ஊடாக ஊக்குவிப்பு நிதி வழங்குவதற்கான நடவடிக்கையினை யாழ்ப்பாண கலாசார பேரவையானது மேற்கொண்டுள்ளது.

இத் திட்டத்திற்கு தர மதிப்பீட்டுக் குழுவின் தீர்மானத்திற்கு அமைய கலைஞர்கள் தெரிவு செய்யப்படுவார்கள். இதற்குத் தகுதியானவர்கள் யாழ்ப்பாண பிரதேச செயலக கலாசார பிரிவுடன் எதிர்வரும் 31.03. 2026 இற்கு முன்னர் தொடர்பு கொள்ளுமாறு யாழ்ப்பாண பிரதேச செயலாளர் கேட்டுக் கொண்டுள்ளார். (8)




## ஆதன உரிமை பெயர்மாற்ற அறிவித்தல்

வலிகாமம் வடக்கு பிரதேசசபை-மல்லாகம் உப அலுவலகம்

உரிமையாளர் பெயர்:- திரு.அருளானந்தம் கிங்ஸ்லி அலெக்ஸ்  
விண்ணப்பதாரர் பெயர்:- திரு.அருளானந்தம் கிங்ஸ்லி அலெக்ஸ்  
முகவரி:- குளமங்கால் வீதி, மல்லாகம்

வலிகாமம் வடக்கு பிரதேச சபையின் மல்லாகம் உப அலுவலகத்திற்கு உட்பட்ட வட்டாரம் 20, குளமங்கால் வீதியில் ஆதன **இல. 178** இல் அமைந்துள்ள மல்லாகம் கோயிற்பற்று, தெல்லிப்பழை கிழக்கு இறை "தலவாக்கடவை" என்ற ஆதனம் உரிமை கோருபவர் சொந்தக்காரர் என்ற பெயரில் எமது ஆதனவரிப் பதிவேட்டில் பதியப்பட்டு காணப்படுகின்றது.

பிரசித்த நொத்தாரிசு சோமசுந்தரம் தேவராஜா முகதாவில் 2016.07.04ஆம் திகதியில் 7452ஆம் இலக்கத்தில் நிறைவேறிய நன்கொடை உறுதி மூலம் தெல்லிப்பழை கிழக்கு இறை "தலவாக்கடவை" நிலப்பரப்பு 06 குளி 0.32 விஸ்தீரணமுள்ள ஆதனம் மோசேஸ் பத்திநாதர் என்பவரால் மோசேஸ் அருளானந்தம் என்பவருக்கு நன்கொடை அளிக்கப்பட்டுள்ளது. 7452ஆம் இலக்க உறுதியின் தாயுறுதியாக எதுவும் குறிப்பிடப்படவில்லை என்பதுடன் குறித்த ஆதனம் நன்கொடையளிப்பவரின் தாயாருக்கு வாய்மொழிச் சீதனமாக வந்ததென்றும் தனதும், நன்கொடை பெறுபவரினதும் வாரிசு உரிமைப்பங்கும் சொந்தமும் ஆட்சியுமானது என்றும் வெளிப்படுத்துகை செய்யப்பட்டுள்ளது. மேலும் குறித்த ஆதனம் பிரசித்த நொத்தாரிசு சோமசுந்தரம் தேவராஜா முகதாவில் 01.08.2016ஆம் திகதி 7477ஆம் இலக்கத்தில் நிறைவேறிய முதுச நன்கொடை உறுதி மூலம் மோசேஸ் அருளானந்தம் என்பவரால் அருளானந்தம் கிங்ஸ்லி அலெக்ஸ் என்பவருக்கு நன்கொடை அளிக்கப்பட்டுள்ளது.

**ஆதனவிபரம்**

வடமாகாணம், யாழ்ப்பாண மாவட்டம், வலிகாமம் வடக்குப் பகுதி, மல்லாகம் கோவிற்பற்று, தெல்லிப்பழை கிழக்கு இறை, வலிகாமம் வடக்குப் பிரதேச செயலகர் பிரிவு, வலிகாமம் வடக்குப் பிரதேசசபை, J/214, மல்லாகம் வடக்கு கிராமசேவகர் பிரிவு, "தலவாக்கடவை" நிலப்பரப்பு ஆறும் குழி தசம் மூன்று இரண்டும் (நில.பர.06 குழி 00.32) குழாய்க்கிணறும் வான்பயிர் செய்பயிர்களும்

இதன் எல்லைகள்  
கிழக்கு:- லூர்த்தம்மா கைம்பெண் யோவேலுக்கும் திலகநாயகம் போல் பிரயவத்சலனுக்குமுரிய ஆதனங்களும்  
வடக்கு :- ஆறுமுகம் கனகசபையின் ஆதனமும்  
மேற்கு :- திரவியநாதன் கைம்பெண் லீலாவதியின் ஆதனமும்  
தெற்கு :- ஒழுங்கை  
இவ்வெல்லைப்படி இதடங்கலும்

தற்போது இவ்வாதனத்தை அருளானந்தம் கிங்ஸ்லி அலெக்ஸ் என்னும் பெயரில் ஆதனவரி பெயர்மாற்றம் செய்வதற்கு விண்ணப்பித்துள்ளார். எனவே இவ்வாதனத்தை உரிமை கோருபவர் யாராவது இருப்பின் பத்திரிகையில் பிரசுரித்த திகதியிலிருந்து முப்பது (30) நாட்களுக்குள் சட்டபூர்வமான ஆவணங்களோடு எழுத்து மூலமாகவோ அல்லது நேரடியாகவோ வெளிநாட்டில் வசிப்பவர்களாக இருந்தால் இங்குள்ள உறவினர்கள் ஊடாகவோ ஆட்சேபனையைத் தெரிவிக்குமாறும் யாரும் ஆட்சேபனை தெரிவிக்காத சந்தர்ப்பத்தில் அருளானந்தம் கிங்ஸ்லி அலெக்ஸ் எனும் பெயருக்கு ஆதன உரிமைமாற்றம் மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்படும் என்பதனையும், இந்த ஆதன உரிமைமாற்றம் செய்வதால் வரக்கூடிய எப்பொறுப்பிற்கும் வலிகாமம் வடக்கு பிரதேசசபை பொறுப்பாளி அல்ல என்பதனையும் தெரிவித்துக் கொள்கின்றேன். (6914)

திரு. சோமசுந்தரம் சுகிர்தன்  
தவிசாளர்,  
வலிகாமம் வடக்கு பிரதேசசபை,  
காங்கேசன்துறை (கொல்லங்கலட்டி)

## வலிகாமம் மேற்கு பிரதேச சபை, சுழிபுரம் ஆதனப் பெயர் மாற்றம்

**ஆதன இலக்கம் 22, குலனை ஒழுங்கை, வட்டாரம் 13**

வலிகாமம் மேற்கு பிரதேசசபையின் அராலி உப அலுவலகத்திற்குட்பட்ட வட்டாரம் 13. குலனை ஒழுங்கை, ஆதன இலக்கம் 22 என்ற ஆதனத்திற்கான ஆதன வரிப்பதிவேட்டில் சொந்தக்காரர் உரிமைகோருபவர் சந்திரகுமார் என்ற பெயர் காணப்படுகின்றது. குறித்த ஆதனத்திற்கு பெயர் மாற்றத்திற்காக செல்வரட்ணம் கிருஸ்ணராஜா பெண் சரிதா என்பவர் விண்ணப்பித்துள்ளார்.

பெயர் மாற்றத்திற்குட்படும் ஆதனமானது ஆரம்பத்தில் திருமதி.க.நாகம்மா என்பவருக்குச் சொந்தமாக இருந்தது என்றும் 1984 ஆம் ஆண்டு வாய்மூலமாக தமக்கு நன்கொடையாக வழங்கப்பட்டது என்றும் 1984 ஆம் ஆண்டிலிருந்து குறித்த அதனத்தில் அமைந்துள்ள வீட்டில் குடும்பமாக வசித்து வந்ததாகவும் தமது நீண்ட கால ஆட்சிக்குட்பட்டது என்றும் வெளிப்படுத்தி சந்திரகுமார் கைம்பெண் வசந்தா என்பவர் பிரசித்த நொத்தாரிசு து.பாக்கியநாதன் முன்பாக 1998.11.25 திகதியில் 2049 ஆம் இலக்கத்தில் அத்தாட்சிப்படுத்தப்பட்ட வெளிப்படுத்தல் உறுதியினை நிறைவேற்றியிருந்தார்

அதன் பின்னர் குறித்த ஆதனத்தை சந்திரகுமார் கைம்பெண் வசந்தா பிரசித்த நொத்தாரிசு பரமநாதன் திலக்ஷனா முன்பாக 07.02.2020 திகதியில் 497 ஆம் இலக்கத்தில் அத்தாட்சிப்படுத்தப்பட்ட சீதன உறுதியால் குறித்த ஆதனத்தினை செல்வரட்ணம் கிருஸ்ணராஜா பெண் சரிதா என்ற அவருடைய மகளுக்கு சீதனமாக வழங்கியிருந்தார்.

குறித்த ஆதனத்தின் விபரம் வருமாறு  
ஆதனப்பெயர் : **பழைய வளவு**  
இறை : அராலி வடக்கு  
விஸ்தீரணம் நிலப்பரப்பு 02

எல்லைகள் கிழக்கு: முத்துக்குமார் ஜெயக்குமாரினாதனம், வடக்கு:மிகுதியாதனம், மேற்கு: தன்னிலத்தில் புதிதாக விடப்பட்ட 6 அடி அகலப் பாதை, தெற்கு : றோட்

இவ் ஆதனப் பெயர்மாற்றம் தொடர்பாக ஆட்சேபனை யாருக்காவது இருப்பின் உரிய ஆவணங்களுடன் 30 நாட்களுக்குள் எழுத்து மூலம் அறியத்தருமாறும் அவ்வாறு உரிமை கோராதவிடத்து குறித்த ஆதனமானது செல்வரட்ணம் கிருஸ்ணராஜா பெண் சரிதா என்பவருக்கு பெயர் மாற்றம் செய்ய உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதுடன் இந்த ஆதனப் பெயர்மாற்றத்தால் வரக்கூடிய எந்த பொறுப்பிற்கும் வலிமேற்கு பிரதேச சபை பொறுப்பாளியல்ல என்பதனையும் தெரிவித்துக்கொள்கின்றேன். (6912)

தவிசாளர்/செயலாளர், வலிகாமம் மேற்கு பிரதேசசபை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெளிநாடு பாரதம்



# 4 ஆண்டுகளைக் கடந்த ரஷ்யா - உக்ரைன் போர்

## ஐ.நா விடுத்துள்ள கடும் எச்சரிக்கை!

**(கீவ்)........ உக்ரைன் மீது ரஷ்யா தொடுத்த போரின் 4ஆவது ஆண்டில் (5 ஆயிரத்துக்கும் அதிகமான பொதுமக்கள் கொல்லப்பட்டிருப்பது) ஐ.நா சபையின் மனித உரிமைகளை பகிரங்கமாக மீறுவதாக ஐ.நா பொதுச் செயலாளர் அன்டோனியோ குட்டெரெஸ் கடும் எச்சரிக்கை விடுத்துள்ளார்.**

உலகம் முழுவதும் மனித உரிமைகள் "முழு அளவிலான தாக்குதலுக்கு" உள்ளாகியிருப்பதாகக்கூறி ஐக்கிய நாடுகள் சபையின் பொதுச் செயலாளர் அன்டோனியோ குட்டெரெஸ், மனித உரிமைகள் பேரவையின் 20ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு ஆற்றிய உரையில் தெரிவித்துள்ளார்.

வலிமை உள்ளவர்களே சட்டத்தை தீர்மானிக்கும் நிலை உருவாகியுள்ளதாகவும், உலகத் தலைவர்கள் தங்களுக்குச் சாதகமான மனித உரிமை விதிகளை மட்டும் தேர்ந்தெடுத்துப் பின்பற்றுவதாகவும் அவர் குற்றம் சாட்டினார்.

தொடர்ந்து பேசிய அவர், மனித உரிமைகள் வீழ்ச்சியடையும்போது அமைதி, வளர்ச்சி மற்றும் சமூக ஒற்றுமை என அனைத்தும் சிதைந்துவிடும் என்று குறிப்பிட்டார்.

ஈரான் போன்ற நாடுகளில் போராட்டங்கள் வன்முறையான முறையில் ஒடுக்கப்படுவதையும், அகதிகள் மற்றும் சிறுபான்மையினர் குறிவைக்கப்படுவதையும் அவர் தனது உரையில் வன்மையாகக் கண்டித்தார்.

ஐக்கிய நாடுகள் சபையின் பாதுகாப்புச்சபை மற்றும் சர்வதேச நிதி அமைப்புகளில் சீர்திருத்தங்கள் அவசியம் என்பதை வலியுறுத்திய குட்டெரெஸ், 1945இல் இருந்த உலகத்தை பிரதிபலிக்காமல் இன்றைய காலத்திற்கு ஏற்ப இந்த அமைப்புகள் மாற வேண்டும் என்றார். (3)

## தாய்ப் பாசத்திற்காக ஏங்கும் குட்டி குரங்கு கண்களை நனைக்கும் நெகிழ்ச்சிச் சம்பவம்!



(டோக்கியோ)

ஜப்பானில் உள்ள ஒரு புகழ்பெற்ற மிருகக் காட்சிசாலையில் பிறந்து ஆறு மாதங்களே ஆன ஒரு குட்டி குரங்கு, தற்போது சர்வதேச அளவில் பேசுபொருளாக மாறியுள்ளது. தாயால் கைவிடப்பட்ட நிலையில், ஒரு பொம்மையை தனது தாயாக ஏற்றுக்கொண்டுள்ள அந்த குட்டியின் செயல் உலகெங்கும் உள்ள மக்களின் இதயங்களை நெகிழ வைத்துள்ளது.

சுமார் 6 மாதங்களுக்கு முன்பு இந்த மிருகக் காட்சிசாலையில் பிறந்த இந்தக் குட்டி குரங்கை, பிறந்த சில நாட்களிலேயே அதன் தாய் பிரிந்து சென்றது. இதனால் எவ்வித அரவணைப்பும் இன்றி ஊழியர்களின் பராமரிப்பிலேயே வளர்ந்து வந்தது. ஒரு கட்டத்தில் மற்ற குரங்குகளுடன் சேர்த்துவிட முயற்சி செய்தபோது, அவை இந்தக் குட்டியைத் தாக்கித் துரத்தியுள்ளன. இதனால் மிகுந்த மன அழுத்தத்திற்குள்ளான குட்டி குரங்கு, யாரிடமும் பழகாமல் முடங்கிப் போனது. குட்டியின் நிலையை உணர்ந்த மிருகக் காட்சிசாலை நிர்வாகம், அதற்குப் பல பொம்மைகளை வழங்கியது.

அதில் ஒரு குறிப்பிட்ட குரங்கு பொம்மையை மட்டும் அக்குட்டி இறுகப் பற்றிக் கொண்டது. உண்பது, உறங்குவது எனத் தனது 24 மணி நேரத்தையும் அந்தப் பொம்மையுடனேயே கழித்து வருகிறது. அந்தப் பொம்மையையே தனது தாயாகக் கருதி, அதனிடம் அரவணைப்பைத் தேடிக் கொள்கிறது.

இந்த நெகிழ்ச்சியான வீடியோக்கள் சமூக வலைதளங்களில் வைரலானதை அடுத்து, உலகம் முழுவதிலுமிருந்து பார்வையாளர்கள் குவியத் தொடங்கியுள்ளனர்.

பார்வையாளர்களின் எண்ணிக்கை அளவுக்கு அதிகமாக அதிகரித்துள்ளதால், மிருகக் காட்சிசாலை நிர்வாகம் தற்போது கடுமையான கட்டுப்பாடுகளை விதித்துள்ளது.

அத்துடன் இந்தக் குட்டி குரங்கைப் போலவே வடிவமைக்கப்பட்ட பொம்மைகள் தற்போது சந்தையில் அதிக அளவில் விற்பனையாகி வருகின்றன. ஒரு பொம்மையின் விலை சுமார் 80 அமெரிக்க டொலர் என நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

பாசத்திற்காக ஏங்கும் இந்தச் சிறு உயிரியின் கதை, இணையத்தில் பலரையும் நெகிழ்ச்சியில் ஆழ்த்தியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (3)



## ஈரானில் பதற்றம்

### இந்தியர்களை உடனடியாக வெளியேறுமாறு அறிவுறுத்தல்



(டெஹ்ரான்)

ஈரானில் முன்னெடுக்கப்பட்டு வரும் நாடு தழுவிய அரசாங்க எதிர்ப்புப் போராட்டங்கள் மற்றும் மாறிவரும் பாதுகாப்புச் சூழலைக் கருத்தில் கொண்டு, அங்குள்ள இந்தியப் பிரஜைகள் அனைவரும் உடனடியாகக் கிடைக்கும் போக்குவரத்து வசதிகளைப் பயன்படுத்தி ஈரானை விட்டு வெளியேறுமாறு இந்தியத் தூதரகம் அவசர ஆலோசனையை வழங்கியுள்ளது.

ஈரானில் தங்கியுள்ள இந்திய மாணவர்கள், யாத்ரீகர்கள், வணிகர்கள் மற்றும் சுற்றுலாப் பயணிகள் அனைவரும் வர்த்தக ரீதியிலான விமானங்கள் உட்பட கிடைக்கக் கூடிய போக்குவரத்து சாதனங்கள் மூலம் வெளியேறுமாறு கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளனர். கடவுச்சீட்டு மற்றும் அடையாள அட்டைகள் உள்ளிட்ட குடிவரவு ஆவணங்களை எப்போதும் கையில் வைத்திருக்குமாறு கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளனர்.

ஈரானில் பல்கலைக்கழகங்கள் மீண்டும் திறக்கப்பட்டதைத் தொடர்ந்து, டெஹ்ரான் உள்ளிட்ட முக்கிய நகரங்களில் மாணவர்கள் பாரிய அளவில் போராட்டங்களை முன்னெடுத்து வருகின்றனர்.

பாதுகாப்புப் படையினருக்கும் போராட்டக்காரர்களுக்கும் இடையே மோதல்கள் ஏற்பட்டுள்ளதோடு, ஆயிரக்கணக்கானோர் கைது செய்யப்பட்டுள்ளதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

மேலும், அமெரிக்கா மற்றும் இஸ்ரேல் உடனான ஈரானின் மோதல் போக்கு அதிகரித்துள்ளமையும் இந்த எச்சரிக்கைக்கு ஒரு காரணமாகும். (3)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

கல்கியின் பாகம் - 4

# பொன்னியின் செல்வன்

காவியத் தொடர் 986





"இல்லை, இல்லை. அவரிடம் நான் அளவில்லாத நன்றியுடையவள். ஆனால் அவருடன் நான் மனை வாழ்க்கை நடத்தவில்லை. ஐயா! நான் ஏழைக் குடியில் பிறந்தவள். பிறந்தவுடனே கைவிடப்பட்டவள். ஆயினும் என்னுடைய நெஞ்சை ஒரே ஒருவருக்குத்தான் அர்ப்பணம் செய்தேன். அதை ஒரு நாளும் மாற்றிக் கொண்டதில்லை."

"நந்தினி! அந்தப் பாக்கியசாலி யார்? வேண்டாம் அதைச் சொல்ல வேண்டாம். நீ யார்? உண்மையைச் சொல்! நீ என் தந்தையின் மகள் இல்லாவிடில், என் சகோதரி இல்லாவிடில், ஆழ்வார்க்கடியானுடன் கூடப் பிறந்தவளும் இல்லை என்றால், பிறகு நீ யார்? அதை மட்டும் சொல்லிவிடு, நந்தினி! அதைத் தெரிந்து கொள்ளாவிட்டால் எனக்குப் பைத்தியம் உண்மையிலேயே பிடித்துவிடும்!" என்றார் கரிகாலர்.

"அதை தங்களுக்கு தெரிவிக்க வேண்டுமென்று தான் நானும் விரும்புகிறேன். ஆனால் தங்களுடைய தோழரும் என்னுடைய தோழியும், இதோ நெருங்கி வந்துவிட்டார்கள். மறுபடியும் சந்தர்ப்பம் வாய்க்கும்போது அவசியம் சொல்லுகிறேன்" என்றாள் நந்தினி.

மிகச் சமீபத்தில் வந்துவிட்ட வல்லவரையனைப் பார்த்துப் பழுவூர் ராணி, "ஐயா! இது என்ன வெறுங்கையுடனே திரும்பி வந்திருக்கிறீர்கள்? புலியின் தலை எங்கே?" என்று கேட்டாள்.

"தேவி! புலியின் தலையைக் கொண்டு வந்து தங்கள் காலடியில் சமர்ப்பிக்கும் பாக்கியம் எனக்குக் கிட்டவில்லை!" என்றான் வந்தியத்தேவன்.

"ஆகா! இவ்வளவுதானா உமது வீரம்? உமது முன்னோர்களின் வீரத்தைப் பற்றிப் பாட்டுகள் எல்லாம் சொன்னீரே? மூன்று குலத்து வேந்தர்களின் தலைகளைப் பறித்துக் கழனியில் நடவு நட்டார்கள் என்று சொன்னீரே?"

"அது என்ன அப்படிப் பட்ட பாடல்?" என்று கரிகாலர் கேட்டார். "ஐயா! நீர் சொல்கிறீரா? நான் சொல்லட்டுமா?" என்று நந்தினி வந்தியத்தேவனைப் பார்த்து வினவினாள்.

"ராணி! அப்படி ஒரு பாடல் சொன்னதாக எனக்கு ஞாபகம் இல்லையே?" என்றான் வந்தியத்தேவன்.

"உமக்கு ஞாபகம் இல்லை. ஆனால் எனக்கு நன்றாய் நினைவு இருக்கிறது. நான் சொல்லுகிறேன் கேளுங்கள், ஐயா!

சேனை தழையாக்கிச் செங்
குருதி நீர் தேக்கி
ஆனை மிதித்த அருஞ்
சேற்றில்-மான பரன்
பாவேந்தர் தம் வேந்தன்
வாணன் பறித்து நட்டான்
மூவேந்தர் தங்கள் முடி!

எப்படியிருக்கிறது பாட்டு! கோமகனே! தாங்கள் பாண்டியன் ஒருவனுடைய தலையை மட்டுமே கொண்டீர்கள்.

"கோமகனே! பழுவேட்டரையரைப் பற்றி என் காதில் படத் தவறாக எதுவும் சொல்ல வேண்டாம். அவர் என்னிடம் ஆசை கொண்டார். என்னை உலகமறிய மணந்து கொண்டார். அநாதைப் பெண்ணாயிருந்த என்னை அவருடைய திருமாளிகையில் பட்டத்து ராணியாக்கிப் பெருமைப்படுத்தினார்."

"ஆனால் உன்னுடைய விருப்பம் என்ன, நந்தினி? நீ அவரை உண்மையிலேயே உன் பதியாகக் கொண்டு பூஜிக்கிறாயா? அப்படியானால்"

(தொடரும்...)



# சிறுவர் அரங்கம்

## ஆணவத்தின் அழிவு



பேரறிஞராகிய டயோஜெனிஸ் என்பவர் மாவீரன் அலெக்சாண்டரின் ஆசிரியராக இருந்தார்.

தான் மேம்பட்டவன், மற்றவர்களை விட உயர்ந்தவன் என்ற எண்ணம் அலெக்சாண்டரின் உள்ளத்தில் ஊறி இருந்தது.

ஆசிரியரைத் தேடி அலெக்சாண்டர் அவர் இல்லம் ஒரு நாள் சென்றான்.

அப்பொழுது டயோஜெனிஸ் பல மனித மண்டை ஓடுகளை வைத்து ஒவ்வொன்றையும் மிக உன்னிப்பாக உற்றுக் கவனித்துக் கொண்டிருந்தார்.

நீண்ட நேரமாகியும் அலெக்சாண்டர் வந்ததை அவர் கவனிக்காமல் தம் செயலிலேயே ஈடுபட்டிருந்தார்.

பொறுமை இழந்த அலெக்சாண்டர் சிறு கனைப்புக் கனைத்தான். ஆசிரியர் திரும்பிப் பார்த்தார்.

"ஐயா! இந்த மண்டை ஓடுகளை வைத்து அப்படி என்ன ஆராய்ச்சியில் ஈடுபட்டு இருக்கிறீர்கள்?" என்று பணிவுடன் கேட்டான் அலெக்சாண்டர்.

"வேறொன்றுமில்லை. இதில் ஒன்று உன் தந்தையின் மண்டை ஓடு. மற்றவை அடிமைகளின் மண்டை ஓடுகள் இவற்றுள் எது உன் தந்தையின் மண்டை ஓடு என்று கண்டுபிடிக்கும் ஆராய்ச்சியில் ஈடுபட்டேன்.

ஆனால் இம்மண்டை ஓடுகளிடையே என்னால் வேற்றுமையே காண முடியவில்லை. எல்லாம் ஒன்று போலவே இருக்கின்றன. உன்னால் முடிகிறதா? பார்" என்று கேட்டார் டயோஜெனிஸ்.

இதைக் கேட்ட அலெக்சாண்டரின் ஆணவம் அழிந்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நீர்வெறுப்பு நோய்: நாய்களிலும் பூனைகளிலும்

**வாருங்கள் எம்மினிய உறவுகளே!**

செல்வங்களுள் கிடைத் தற்கரிய செல்வம் நோயற்ற வாழ்வு ஆகும். சுகதேகிகளாக நாம் இருக்கும் வரையும் இப் பிறப்பினை முழுமையாக அனுபவிக்க முடியும். தேடிய வருமானமும் ஓடியோடி பெற்ற உறவுகளும் அலைந்து பெற்ற கல்வியும் அனைத்தையும் வைத்து பெற்ற புகழும் நோய் வந்தால் எம்மைவிட்டு பறந்தே போய்விடும்.

இறுதியில் காதற்ற ஊசியும் வாராது கடைவெளிக்கே என்ப தனை நாமே மெய்ப்பித்து விடுகின்றோம். கூடியிருந்த பிள்ளைகளும் சுற்றியிருந்த சுற்றத்தாரும் நாம் நோய் வாய்ப்பட்டவுடன் எம்மை விட்டு தள்ளியே நிற்கின்றதனை, நின்றதனை அவரவர் நோயுற்ற காலத்தில் வெகுவாக அனுப வப்பட்டிருக்கிறோம். எதற்கும் உதவாதவர் போல நாம் அந்நி யோன்னியப்பட்டிருக்கும் காலங் கள் அவை. எம்மாலும் முடியா திருக்கும் அந்தக் காலங்களில் உதவிக்கென இருப்பவர்கள் ஒரு சிலரே.

அவ்வாறிருப்பவர்களும் சினந்து கொள்ளாத அளவுக்கு நாமும் எம்மைத் தயார்ப்படுத்திக் கொள்ளக்கூட சிலநேரங்களில் வருகின்ற தொற்றுநோய்கள் விடுவதில்லை. அதிலும் தொற்றா நோய்களென்றால் துணிவோடு அருகிருந்து கவனிப்பவர்கள் தொற்று நோய்களென்றவுடன் விலகியே இருந்துவிடுவார்கள். இவையனைத்திலும் தமதுயிரை துச்சமென மதித்து நோயுற் றவரைக் கவனித்துக் கொள்ளும் மருத்துவர்கள், தாதியர்கள், மருத்துவப் பணியாளர்கள் அனைவரும் வணக்கத்துக்குரி யவர்கள்.


மருத்துவர்களாகி இப்புனித பணியை செய்யும் மக்களைப் பெற்றதாலும் மருமக்கள் கிடைத் ததாலும் இதனைத் துணிந் தெழுத முடிகின்றது.

பொதுவாகவே தொற்று நோய்களுள் வைரஸ் நோய்கள் ஆபத்தானவை. இவை சுவாசிப் பதில் வளியிலுள்ள ஈரத் துணிக்கைகளுடன் வந்து சேர்வ துடன் பலவகையான காவிகளால் பரப்பப்படுவனவாகவே இருக் கின்றன. குறிப்பிட்டுக் கூறு வதாயின் எம்மை ஆட்டிப்படைத்த கோவிட் வைரஸ், இன்னும் உயிர் களைக் காவு கொண்ட மலேரியா, பறவைக் காய்ச்சல், எலிக்காய்ச்சல் இவற்றுடன் தற்போது பலவுயிர்களை காவுகொள்ளும் டெங்கு நோயும் அடங்கும்.

**நீர்வெறுப்பு நோய்**

றேபீஸ் எனப்படும் ஒருவகை வைரஸ் நோயை நீர்வெறுப்பு நோய் என கூறுவர். இந் நோய்த்தொற்று உள்ளவர்களின் நரம்புத்தொகுதி மற்றும் மூளை ஆகியன வெகுவாகப் பாதிக்கப்பட் டுவிடும். பொதுவாகவே

**இனியொரு பசுமைப்புரட்சிக்கு...**




அனைத்து பாலூட்டிகளையும் இந்நோய் பாதிக்கும் என அறியப் படுகின்றது. ஒரு பூனையை நோயினால் பாதிக்கப்பட்ட இன் னொரு பூனை கடிப்பதனால் இக்கிருமி தொற்றுகின்றது.

பூனை மாத்திரமல்ல ஏனைய விலங்குகளுக்கும் இந் நோய்த்தொற்று இலகுவில் பரவி விடுகின்றது. வீடுகளில் வளர்க் கப்படும் செல்லப் பிராணிகளில் இந்நோய்த்தொற்று ஏற்படாமல் நாம் அவதானமாக இருத்தல் வேண்டும். இந்நோய்த்தொற்று ஏற்பட்ட பூனைகளில் திடீரென நரம்பு பகுதிகளில் தொடரற்ற செயற் பாடுகள், ஒவ்வாமைத் தன்மை, பதற்ற உணர்வு ஆகிய அறி குறிகள் வெளிப்படத் தொடங்கும்.

**காரணி ஒரு வைரஸ்**

நீர்வெறுப்பு நோய்க்கான காரணி ஒருவகை ரப்டோவிரிடே (Raptoviride) குடும்ப வைரஸ் ஆகும். இந்த வைரஸ் பூனை கடிப்பதில் அந் நோய்வாய்ப்பட்ட பூனையிலிருந்து மனிதனுக்கு தொற்றிவிடும். ஆதலினால் வீட்டில் வளர்க்கப்படும் வளர்ப்பு மிருகங் களான பூனை, நாய். போன்றன வற்றிற்கு அவசியமான நோய்த் தடுப்பூசி போடுதல் அவசியமான தாகும். அந்தந்த பிரதேசங்களில் இவ்வாறான தடுப்பூசிகளை வளர்ப்பு மிருகங்களுக்கு வழங் கும் நடைமுறைகள் இன்னும் இருக்கின்றன.

**மிருகங்களிலிருந்து மனிதனுக்கு**

செல்லப்பிராணிகளை அலை வதோ அவற்றுடன் விளை யாடுவதோ மிகவும் அவதானமாக இருக்க வேண்டும். நாய் போன்ற பெரிய விலங்குகளென்றால் அவற்றை கட்டி வளர்க்கலாம். ஆனால் பூனைகளை கட்டி வளர்த் தல் சிரமம் என்பதனால் பூனை களை கட்டுக்குள் வைத்திருப்பது கடினமாகும். முக்கியமாக விளை யாட்டுக்கேனும் பூனைகளை தொட்டு தடவி விளையாடுவது நல்லதல்ல. அவசியம் தவிர்க் கப்படல் வேண்டும்.

பொதுவாகவே வீடுகளில் வளர்க்கப்படும் இவ்வாறான வளர்ப்பு செல்லப் பிராணிகளுக்கு காலக்கிரமத்தில் தடுப்பூசிகளை போடுவதனால் அவற்றினாலேற் படும் நோய்த் தொற்றுக்கள் குறைவென்றாலும் கவனயீனமாக இருந்துவிட்டால் இவ்வாறான நோய்களை தவிர்க்கலாம்.

**மனிதனில் நோயின் அறிகுறிகள்**



**பேராசிரியர் கு.மிகுந்தன்**
விவசாய உயிரியல்துறை,விவசாய பீடம்
யாழ்.பல்கலைக்கழகம்

பூனைகளில் நோய்த்தொற்று ஏற்பட்டால் பின்வரும் அறி குறிகளை காணலாம்: பசி யின்மை, பதற்றத் தன்மை, நரம்புத் தொகுதிகளுக்கிடையில் தொடர்பின்மை, திடீரென்று கோபப்படுதல், உமிழ்நீர் அதி கமாக சுரந்து வழிதல், விழுங்க முடியாது கஷ்டப்படுதல், நரம்புத் தளர்ச்சியேற்பட்டு நடக்க முடியாமல் வருதல், இவற்றுடன் உடனடி இறப்பு என்பனவும் ஏற்படும்.

முதலில் மக்களின் உமிழ்நீர்சுரப்பில் காணப்படும் இந்த நோய்க்காரணி உமிழ்நீர்ச் சுரப்பு அதிகமாக சுரக்கப்படுவ தனால் அதனுடன் வெளியேறி பின்னர் நோயற்ற இன்னொரு மனிதரைக் கடிப்பதனால் பிறரது உடலில் விரைவாக பரவி விடும். பூனையோ, நாயோ நாவால் நக்குவதனை தவிர்க்க வேண்டும்.

இன்னும் வீட்டுக்கு வருபவரை கடித்தால் இதன் தாக்கம் பெரிது. அதனால் அலட் சியமாக இருக்காதீர். தவறுத லாகவேனும் தற்செயலாக வேனும் பூனை மற்றும் நாய் கடித்தால் அதற்குரிய தடுப் பூசியை போட வேண்டும்.

அதனுடன் அந்த வளர்ப்பு மிருகம் தொடர்ச்சியாக 14 நாட்கள் உயிரோடிருக் கின்ற தாயின் அதனால் எந்தவித பாதிப்புமில்லை. எதுவாயி ருப்பினும் வருமுன் காப்பது அவசியம் ஆகும்.

பூனைக்கு வழங்கப்படும் தடுப் பூசியினை குறிப்பிட்ட கால இடை வெளியில் தவறாது வழங் கினால் இவ்வாறான தொற்று நோய் களைப் பற்றி பாரதூரமாக யோசிக்க தேவையில்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கச்சதீவு அந்தோனியார் ஆலய திருவிழா

# சகல ஏற்பாடுகளும் பூர்த்தி

## யாழ். அரசாங்க அதிபர் தெரிவிப்பு

**(யாழ்ப்பாணம்)**

**கச்சதீவு புனித அந்தோனியார் ஆலய வருடாந்த திருவிழாவிற்கான சகல ஏற்பாடுகளும் பூர்த்தி செய்யப்பட்டுள்ளதாக யாழ்.அரச அதிபர் ம.பிரதீபன் தெரிவித்துள்ளார்.**

கச்சதீவு புனித அந்தோனியார் ஆலய வருடாந்த திருவிழா ஏற்பாடுகள் தொடர்பான இறுதிக் கலந்துரையாடல் யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் ம.பிரதீபன் தலைமையில் நேற்றைய தினம் மாவட்ட செயலக அரசாங்க அதிபர் அலுவலகத்தில் நடைபெற்றது.

இக் கலந்துரையாடலில் தலைமையுரையாற்றிய அரசாங்க அதிபர், வரலாற்றுச் சிறப்பு மிக்க கச்சதீவு புனித அந்தோனியார் திருத்தலத்தின் 2026 ஆம் ஆண்டுக்கான வருடாந்த திருவிழா எதிர்வரும் பெப்ரவரி மாதம் 27,28 ஆம் திகதிகளில் நடைபெறவுள்ளதற்கான சகல ஏற்பாடுகளும் பூர்த்தி செய்யப்பட்டுள்ளதாகவும், அதற்கான இறுதிக் கலந்துரையாடலாக இக் கலந்துரையாடல் அமைவதாகவும் தெரிவித்தார்.

கச்சத்தீவு புனித அந்தோனியார் திருவிழா சிறப்புற அனைவரின் ஒத்துழைப்பினையும் நல்குமாறும் அவர் கேட்டுக் கொண்டார். மேலும் இலங்கை,இந்தியாவிலிருந்து வருகை தரும் பக்தர்களின் எண்ணிக்கை, அவர்களுக்கான தங்குமிட வசதிகள், கூடாரங்கள், உணவு வசதிகள், பாதுகாப்பு, சுகாதாரத் தேவைகள், மலசலகூட வசதிகள், குடிநீர் தேவைகள், கடல் மற்றும் தரைப் போக்குவரத்து ஒழுங்குகள், கழிவு முகாமைத்துவம் உள்ளிட்ட பல்வேறு விடயங்கள் தொடர்பாக இது வரை எடுக்கப்பட்ட சகல நடவடிக்கைகளும் அரசாங்க அதிபரால் விரிவாக ஆராயப்பட்டது.

இக் கலந்துரையாடலில் யாழ்ப்பாண மறை மாவட்ட குரு முதல்வர் அருட்தந்தை P.J. ஜெபரட்ணம், வடமாகாண கடற்படைத் தளபதி ரியல் அட்மிரல் புத்திக லியனகமகே, இந்திய துணைத் தூதரக அதிகாரி செல்வி.சி.எஸ். நம்மியா உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர். (8)

# பன்னிரு திருமுறைகளை இலவசமாக வழங்கும் தெல்லிப்பழை துர்க்காதேவி தேவஸ்தானம்

## கலாநிதி ஆறு.திருமுருகன் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

தெல்லிப்பழை துர்க்காதேவி தேவஸ்தானத்தின் பெரும் முயற்சியால் சுமார் இரண்டு கோடி செலவில் பன்னிரு திருமுறைகளைப் பதிப்பித்து, வெளியீடு செய்து பக்தர்களுக்கு இலவசமாக வழங்கி வருவதாக தெல்லிப்பழை துர்க்காதேவி தேவஸ்தான தலைவர் கலாநிதி ஆறு.திருமுருகன் தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்,

பன்னிரு திருமுறைகள் சைவ சமயத்தின் மிக உயர்ந்த பக்தி இலக்கியத் தொகுப்பாகும். இது சிவபெருமானைப் போற்றி 27 சிவனடியார்களால் பல காலகட்டங்களில் பாடப்பட்டு, நம்பியாண்டார் நம்பியால் தொகுக்கப்பட்ட "தமிழ் வேதங்கள்" என்று போற்றப்படுகின்றன.

எங்கள் ஈழத்திருநாட்டில் திருமுறைகளை வளர்க்க வேண்டும் என நாங்கள் மிகுந்த ஆவல் கொண்டு பணியாற்றி வருகிறோம்.


திருமுறைகளை வளர்ப்பதற்கு தேவையான சகல உதவிகளையும் தெல்லிப்பழை துர்க்காதேவி தேவஸ்தானம் தயங்காமல் நிறைவேற்றும்.

ஆலயங்கள் மற்றும் அறநெறி பாடசாலைகளுக்கு நாங்கள் பன்னிரு திருமுறைகளை இலவசமாக வழங்கி வருகிறோம். மிக மிக பெறுமதியான இந்த அரிய சொத்தினை முறையாக பாதுகாக்க வேண்டிய பொறுப்பு சகல ஆலயங்களுக்கும் உண்டு. பன்னிரு திருமுறைகள் தேவையான ஆலயங்கள் எங்களோடு தொடர்பு கொண்டு இலவசமாகப் பெற்றுக் கொள்ள முடியும்.

திருமுறைகள் அஞ்ஞானம் என்ற இருளை அகற்றி, ஞானம் என்ற ஒளியை ஏற்றி, மனித வாழ்வை நல்வழிப் படுத்தும் கலங்கரை விளக்கங்களாகக் கருதப்படுகின்றன. இத்தகைய சிறப்புமிக்க திருமுறைகளை எதிர்கால தலைமுறைக்குக் கொண்டு சேர்க்க சைவத் தமிழ் மக்கள் யாவரும் பாடுபட வேண்டும் என அன்பாக வேண்டி நிற்கின்றேன் என அவர் தெரிவித்தார். (க-8)

## முல்லைத்தீவு

# செம்மலை பெரிய குளக்கட்டை சீரமைக்குமாறு கோரிக்கை



(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு - செம்மலை கமக்கார அமைப்பு பிரிவிலுள்ள பெரியகுளத்தின் அணைக்கட்டு உடைப்பெடுத்துள்ளதாக அப்பகுதி மக்களால் பாராளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரனுக்கு தெரியப்படுத்தப்பட்டதன், நிலைமைகளும் நேரடியாகக் காண்பிக்கப்பட்டன. அந்த வகையில் சுமார் 75 ஏக்கர் வயல்நிலங்களுக்கு நீர்ப் பாசனம் செய்யக்கூடிய குறித்த பெரிய குளத்தின் அணைக்கட்டு மூன்று இடங்களில் உடைப் பெடுத்துக் காணப்படுகின்றது. இதனால் கடல்நீர் குளத்தினுள் உட்புகுவதால் வயல்நிலங்களுக்கு பாதிப்பு ஏற்படும் அபாய நிலை காணப்படுவதாகவும், கிராமத்தின் குடிநீரிலும் பாரிய தாக்கம் ஏற்பட வாய்ப்பிருப்பதாகவும் மக்களால் முறைபீடு செய்யப்பட்டது.

அத்துடன் குறித்த பகுதியில் அதிகரித்துள்ள காட்டுயானைகளின் கெடுபிடிகளால் தமது விவசாய நடவடிக்கைகள் பாதிக்கப்பட்டு வருவதாகவும் அப்பகுதி மக்களால் சுட்டிக் காட்டப்பட்டதுடன், செம்மலை கிழக்கு புளியமுனைப் பகுதியில் யானைவேலி அமைப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளுமாறும் கோரிக்கை முன் வைக்கப்பட்டது. இந் நிலையில் அப்பகுதி மக்களின் பிரச்சினைகளையும், கோரிக்கைகளையும் கேட்டறிந்த பாராளுமன்ற உறுப்பினர் மக்களால் முன்வைக்கப்பட்ட விடயங்கள் தொடர்பில் தம்மால் கவனஞ் செலுத்தப்படுமெனத் தெரிவித்தார்.

இதன்தொடர்ச்சியாக முல்லைத்தீவு மாவட்ட கமநல உதவி ஆணையாளரை நேரில் சந்தித்து கலந்துரையாடிய பாராளுமன்ற உறுப்பினர் ரவிகரன், குறித்த பகுதிக்கு நேரடியாக வருகைதந்து நிலைமைகளைப் பார்வையிட்டு மேலதிக கமநல உதவி ஆணையாளரிடம் வலியுறுத்தியிருந்தார்.

இந்நிலையில் குறித்த குளக்கட்டுச் சீரமைப்பு மற்றும் யானை வேலி அமைப்பது தொடர்பில் தம்மால் கவனஞ் செலுத்தப்படுமெனத் தெரிவித்த கமநல உதவி ஆணையாளர், எதிர்வரும் 27 ஆம் திகதி வெள்ளிக்கிழமை குறித்த பகுதிகளுக்கு நேரடியாக வருகைதந்து நிலைமைகளைத் தாம் பார்வையிடுவதாகவும் தெரிவித்துள்ளார். (8)

# இராசிபலன்

25.02.2026
மாசி 13, புதன்கிழமை
நவமி பின்னிரவு 3.12மணிவரை

ரோகினி பிற்பகல் 2.16 மணிவரை
சுப நேரம் 4.59-6.29மணிவரை
இராகுகாலம் 12.29-1.59மணிவரை

சந்திராஷ்டமம்:
சுவாதி,விசாகம்

வளவன்

**மேஷம்:** துணிவும் தன்னம்பிக்கையும் அதிகரிக்கும், பணப்புழக்கம் அதிகரிக்கும் நாள், சுப நிகழ்வுகளில் கலந்து கொள்ள அழைப்புகள் வந்து சேரலாம், போசன சுகமுண்டு.

**கடகம்:** குடும்பத்தில் குதூகலம் தரும் சம்பவங்கள் இடம்பெறலாம், விலை உயர்ந்த பொருட்களை வாங்கி மகிழும் வாய்ப்புண்டு, பொருளாதார நிலையில் திருப்தி காணும் நாள்.

**துலாம்:** மற்றவர்களின் மனம் கோணாது நடந்து கொள்வது நல்லது, அடுத்தவர்கள் விவகாரங்களில் தலையிடுவதைத் தவிர்ப்பது நல்லது, உடல் நலனில் கவனம் தேவை.

**மகரம்:** புண்ணிய காரியங்களில் ஆர்வம் காட்டுவீர்கள், அரைகுறையாக இருந்த பணிகளை மீதியும் தொடர்வீர்கள், வீட்டுத் தேவைகள் எளிதில் பூர்த்தியாகும்.

**ரிஷபம்:** தொலைபேசி வழியில் கேட்கும் செய்திகளால் உற்சாகமடைவீர்கள், திட்டமிட்ட காரியமொன்றில் திசை திருப்பங்கள் ஏற்படலாம், கற்பனை மிகுதியான நாள்.

**சிம்மம்:** வீட்டை அழகாக வைத்திருப்பதில் ஆர்வம் காட்டுவீர்கள், கட்டடப் பணிகளில் ஆர்வம் கூடும், சிறப்பான நாள், எடுத்த காரியங்களில் கண்ணும் கருத்துமாக இருப்பீர்கள்.

**விருச்சிகம்:** இரவு பகலாக பாடுபட்டதற்கேற்ப பலன் கிடைக்கும், பொருளாதார நிலையில் முன்னேற்றம் காணும் நாள், எடுத்த காரியங்களில் கண்ணும் கருத்துமாக இருப்பீர்கள்.

**கும்பம்:** பொது வாழ்வில் மதிப்பும் மரியாதையும் உயரும் நாள், தொலைபேசி வழியில் கேட்கும் செய்திகளால் உற்சாகமடைவீர்கள், உறவினர் வழியில் ஒத்துழைப்புகள் கிடைக்கும்.

**மிதுனம்:** குடும்பப் பெரியவர்கள் ஆலோசனையைக் கேட்டு நடப்பது நல்லது, புதிய நட்பால் சுப விரயங்கள் ஏற்படலாம், வழிபாட்டால் மகத்துவம் காண வேண்டிய நாள்.

**கன்னி:** தொழிலில் இருந்த எதிர்ப்புகள் மாறும், வழிபாட்டால் பெருமை காண வேண்டிய நாள், அதிகம் செலவாகுமென நினைத்த காரியம் குறைந்த செலவில் நிறைவேறலாம்.

**தனுசு:** சுவாரஸ்யம் தரும் சம்பவங்கள் வந்து சேரலாம், செய்தொழில் மேன்மையுண்டு, கொடுக்கல் வாங்கல்கள் ஒழுங்காகும், உடல் நலன் சீராகும், போசன சுகமுண்டு.

**மீனம்:** இழுபறியாக இருந்த காரியங்களில் முன்னேற்றமுண்டு, பொதுநல ஈடுபாடு அதிகரிக்கும், உறவினர்கள் உங்கள் முன்னேற்றத்தில் அதிக அக்கறை காட்டுவார்கள்.

தெய்வத்தின் மீது நம்பிக்கை வை. அதைவிடத் தம் உழைப்பில் நம்பிக்கை வை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உலகக் கிண்ண ரி-20 தொடர்





## சிம்பாப்வேக்கு எதிரான ஆட்டத்தில் மேற்கிந்திய தீவுகள் அணி அபார வெற்றி!

**உலக கிண்ண ரி-20 கிரிக்கெட் தொடரின் சூப்பர் 8 சுற்றில் சிம்பாப்வே அணிக்கு எதிரான போட்டியில் மேற்கிந்திய தீவுகள் அணி 107 ஓட்டங்கள் வித்தியாசத்தில் அபார வெற்றி பெற்றது.**

ரி-20 உலகக் கிண்ண கிரிக்கெட் தொடரில் சூப்பர் 8 சுற்று போட்டிகள் நடைபெற்று வருகிறது. மும்பை வான்கடே மைதானத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற போட்டியில் குரூப் 1 இல் இடம் பிடித்துள்ள மேற்கிந்திய தீவுகள், சிம்பாப்வே அணிகள் மோதின.

நாணய சுழற்சியில் வென்ற சிம்பாப்வே பந்து வீச்சை தேர்வு செய்தது. அதன்படி முதலில் களம் இறங்கிய மேற்கிந்திய தீவுகள் அணி 20 ஓவரில் 6 விக்கெட் இழப்பிற்கு 254 ஓட்டங்கள் குவித்தது. ஹெட்மையர் 85 ஓட்டங்களும், ரோவ்மேன் பொவெல் 59 ஓட்டங்களும் விளாசினார்.

பின்னர் 255 ஓட்டங்கள் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் சிம்பாப்வே அணி களம் இறங்கியது. மேற்கிந்திய தீவுகள் அணியின் பந்து வீச்சை தாக்குப்பிடிக்க முடியாமல் 147 ஓட்டங்களில் சுருண்டது. சிம்பாப்வே கடைசி விக்கெட்டுக்கு 44 ஓட்டங்கள் சேர்த்தது குறிப்பிடத்தக்கது.

இதனால் மேற்கிந்திய தீவுகள் அணி 107 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது. பிராட் எவன்ஸ் 21 பந்தில் 43 ஓட்டங்கள் விளாசினார். தியோன் மையர்ஸ் 28 ஓட்டங்கள் சேர்த்தார். சிகந்தர் ரசா 27 ஓட்டங்கள் எடுத்து ஆட்டமிழந்தார்.

மேற்கிந்திய தீவுகள் அணி சார்பில் குடகேஷ் மொய்தி 4 விக்கெட்டுக்களும், அகீல் ஹொசைன் 3 விக்கெட்டுகளும் வீழ்த்தினர். (3)

## மேற்கிந்திய தீவுகளுடனான மகளிர் ஒருநாள் தொடரை கைப்பற்றியது இலங்கை



சென் ஜோர்ஜ், கிரெனடா தேசிய கிரிக்கெட் விளையாட்டரங்கில் கடந்த ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற மேற்கிந்தியத் தீவுகளுக்கு எதிரான இரண்டாவது மகளிர் சர்வதேச ஒருநாள் கிரிக்கெட் போட்டியில் 14 ஓட்டங்களால் இலங்கை பரபரப்பான வெற்றியை ஈட்டியது.

இந்த வெற்றியுடன் 3 போட்டிகள் கொண்ட மகளிர் சர்வதேச ஒருநாள் கிரிக்கெட் தொடரில் ஒரு போட்டி மீதம் இருக்க இலங்கை 2 - 0 என்று ஆட்டக் கணக்கில் தொடரை கைப்பற்றியது.

இந்தப் போட்டியில் விஷ்மி குணரட்ன பெற்ற அரைச் சதம், இனோக்கா ரணவீர, சுகந்திகா குமாரி ஆகியோரின் சிறப்பான பந்துவீச்சுகள் என்பன இலங்கை மகளிர் அணியை வெற்றிபெறச் செய்தன.

முதலில் துடுப்பெடுத்தாட அழைக்கப்பட்ட இலங்கை 47.1 ஓவர்களில் சகல விக்கெட்களையும் இழந்து 208 ஓட்டங்களைப் பெற்றது.

துடுப்பாட்டத்தில் விஷ்மி குணரட்ன 58 ஓட்டங்களை அதிக பட்சமாக பெற்றிருந்தார். பந்துவீச்சில் கரிஷ்மா ராம்ஹரக் 26 ஓட்டங்களுக்கு 3 விக்கெட்களைக் கைப்பற்றினார்.

பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய மேற்கிந்தியத் தீவுகள் 48 ஓவர்களில் சகல விக்கெட்களையும் இழந்து 194 ஓட்டங்களைப் பெற்று தோல்வி அடைந்தது.

துடுப்பாட்டத்தில் ஜெனிலீ க்ளாஸ்கோ 50 ஓட்டங்களையும் ஷேர்மெய்ன் கெம்பெல் 30 ஓட்டங்களையும் அதிக பட்சமாக பெற்றனர்.

பந்துவீச்சில் சுகந்திகா குமாரி 38 ஓட்டங்களுக்கு 3 விக்கெட்களையும் இனோக்கா ரணவீர 44 ஓட்டங்களுக்கு 3 விக்கெட்களையும் தெவ்மி விஹங்கா 33 ஓட்டங்களுக்கு 2 விக்கெட்களையும் கைப்பற்றினர். (3)

## அரையிறுதிக்கான கனவைப் பெறுமா? இலங்கை-இந்திய அணிகள்



ரி-20 உலகக் கிண்ண கிரிக்கெட் போட்டியை நடத்தும் இலங்கை மற்றும் இந்தியா அணிகள் தற்போது தொடரின் சூப்பர் 8 சுற்றுகளிலிருந்து வெளியேறும் அபாயத்தில் உள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இங்கிலாந்திடம் தோற்ற இலங்கை அணியும் தென்னாபிரிக்காவிடம் தோற்ற இந்தியா அணியும் மோசமான நிகர ஓட்ட விகிதத்தைக் கொண்டுள்ளன.

மீதமுள்ள இரண்டு போட்டிகளில் ஏதேனும் ஒன்றில் தோல்வியடைந்தால், குறித்த இரு அணிகளும் சூப்பர் எட்டு சுற்றுகளில் உலகக் கிண்ணத் தொடரிலிருந்து வெளியேற்றப்படுவார்கள்.

புள்ளிகள் சமநிலையில் இருப்பதால், தற்போதைய மோசமான நிகர ஓட்ட விகிதம் இலங்கை மற்றும் இந்திய அணி இரண்டிற்கும் பாதகமாக இருக்க வாய்ப்புள்ளது.

இருப்பினும், குறித்த அணிகள் மீதமுள்ள இரண்டு போட்டிகளிலும் வெற்றி பெற்றால், போட்டியில் அரையிறுதி செல்வதற்கான இடத்தைப் பிடிக்கும் வாய்ப்பைப் பெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (3)

## உலகக் கிண்ண ரி-20 இன்றைய ஆட்டங்கள்

நேரம்: இரவு 7 மணி

இடம்: கொழும்பு பிரேமதாஸ மைதானம்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தரிசனம் - 01

புருசோத்தமன்

# யாழ்.போதனா வைத்தியசாலை

ஜனநாயகத்தின் நான்கு தூண்களில் ஒன்று பத்திரிகை.

ஆக, ஜனநாயகம் எனும் பெரும் கட்டுமானம் பலத்துடனும் பயன்தருவதாகவும் இருக்க வேண்டுமாயின், அதன் தாங்கு தூண்கள் மிகவும் பலமாக இருக்க வேண்டும்.

எனவே பத்திரிகை எனும் தூண் பலமாக இருக்கும் போது தான் ஜனநாயகம் பலம் பெறும் - பயன் தரும்.

எனினும் சமகாலத்தில் பத்திரிகை உள்ளிட்ட ஊடகத்துறை குறை காண்பதையே தமது பணியாகக் கருதிச் செயற்படுகின்றன என்ற குற்றச்சாட்டுப் பரவலாக உண்டு.

குறை அளப்பது மட்டும் தான் ஊடகத்துறையின் பணியா?

எத்தனையோ நல்ல விடயங்கள் நடந்திருந்தும் அதுபற்றிப் பேசாமல், தனித்து குறை கூறுவதையே தொழிலாகக் கொண்டால், இந்த மண்ணில் இருந்து சேவையாற்ற யாரேனும் முன்வருவார்களா? என்ற கேள்வியும் பொது மக்களிடம் இருக்கவே செய்கிறது.

இதையும் கடந்து, பெரும்பாலான சமூக வலைத் தளங்கள் மற்றவர்களின் சுய கௌரவத்திற்குக் குந்தகம் விளைவிப்பதாக இருப்பதால், சம்பந்தப்பட்ட அதிகாரிகள்- உத்தியோகத்தர்கள்- அவர்களின் குடும்பங்கள் மன உளைச்சலுக்கு ஆளாகியுள்ளன.

இஃது ஊடக தர்மத்திற்கு உகந்ததா? என்ற வினாக்கள் பதிலின்றித் தொடர்கின்றன.

இஃது ஒருபுறமிருக்க, ஒருவர் சார்ந்து அல்லது ஒரு நிறுவனம் சார்ந்து குற்றச்சாட்டுக்களை முன்வைக்கும் போது, சம்பந்தப்பட்டவரின் அல்லது சம்பந்தப்பட்டதரப்பின் கருத்துக்களையும் அறிந்து அவற்றையும் உரிய முக்கியத்துவத்துடன் பிரசுரிப்பது தான் ஊடக தர்மம்.

ஆனால் அதை எந்த ஊடகங்களும் பின்பற்றுவதில்லை என்ற வேதனையோடு கூடிய பெருமூச்சுக்களின் கனலும் சுடவே செய்கின்றன.

இவ்வாறானதொரு சூழ்நிலையில் வலம்புரி "தரிசனம்" என்ற பகுதியை இங்கு முன் வைக்கின்றது.




ஆம், இது சாதாரணமான தரிசனமன்று. விசேட தரிசனம். குறைகளைச்சுட்டிக் காட்டுவதுடன் அதை நிவர்த்திக்கின்ற வழிவகைகளையும் முன் வைப்பதற்கானது.

மேலாக, சம்பந்தப்பட்ட அதிகாரிகள் - உத்தியோகத்தர்கள் - நிறுவனங்கள் தமது தரப்பு நியாயங்களை அல்லது தாம் முன்னெடுக்கவுள்ள வேலைத்திட்டங்களை- மாற்று ஏற்பாடுகளை பொது மக்களுக்குத் தெரியப்படுத்துவதற்கான களமாகவும் இத் "தரிசனம்" அமையும்.

இத்தரிசன களத்தை புரிதலுடன் பயன்மிக்கதாகவும் இருதரப்புக் கருத்துக்களும் சங்கமிக்கின்ற ஒரு புதிய பண்பாட்டுச் சூழலுடனும் தரிசிக்க நாம் தயாராகுவோம்.

ஆம், தரிசனம் உங்களின் வேண்டுதல்களையும் கோரிக்கைகளையும் உள்ளடக்கியது என்பது மனங்கொள்ளத் தக்கது.

இப்போது தரிசனத்திற்கான கதவு திறக்கப்படுகிறது.

இனி இது அடையா நெடுங்கதவாகி தரிசனத்திற்கு வழிவிடும்.

அந்த வகையில் முதலில் எங்கள் மண்ணின் முதன்மைக்குரிய இடமாக விளங்கும் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையைத் தரிசிப்பது பொருத்தமும் தேவையும் எனக் கருதுகின்றோம்.

ஆம், யாழ்ப்பாணப் போதனா வைத்தியசாலை எங்கள் தமிழ் இனத்தின் பெரும் சொத்து.

அங்கு ஏற்படுகின்ற ஒவ்வொரு முன்னேற்றங்களும் எங்கள் உயிருக்கான உத்தரவாதங்கள். அதேநேரம் யாழ்ப்பாண போதனா வைத்தியசாலையை நிர்வகிப்பதென்பது சாதாரண விடயமன்று.

கற்றறிந்த மருத்துவர்கள் உட்பட துணை மருத்துவ சேவை உத்தியோகத்தர்கள் எனப் பரந்து விரிந்து சாதாரண சுத்திகரிப்புத் தொழிலாளர் வரையில் நிர்வாகம் வியாபிக்கின்றது.

தவிர, பல்வேறு இடங்களில்- வெவ்வேறு சூழல்களில் இருந்து வரக்கூடிய நோயாளர்கள் என, எல்லாவற்றையும் உள்ளீர்த்து உன்னதமான மருத்துவ சேவையை வழங்கி உயிர் காக்கின்ற பணிக்கான நிர்வாகத்தை எவரும் சாதாரணமாகக் கருதிவிடவும் முடியாது.

அதேநேரம் எல்லாவற்றையும் ஒருங்கிணைத்து, நம்பி வருகின்ற நோயாளர்களுக்கு உடனடியாக- உரிய சிகிச்சை வழங்கி அவர்களின் உயிரைப் பாதுகாப்பதென்பது தான் யாழ். போதனா வைத்தியசாலையின் பணிக் கூற்றாக அமையும்.

ஒரு காலத்தில் கட்டிட வசதிகள் இல்லாமை தொடர்பில் சிலாகிக்கப்பட்ட யாழ். போதனா வைத்தியசாலை இப்போது மூச்சு விட முடியாத அளவில் கட்டிடங்களால் நிரம்பி வழிகின்றன.

கூடவே, மருத்துவப் பிரிவுகள், கிளினிக்குகள், சத்திர சிகிச்சைக்கான விஸ்தரிப்புகள் என மருத்துவ வசதிகள் பல்கிப் பெருகியுள்ளன.

எனினும் எனது உறவினருக்கு உடனடியாக சிகிச்சை வழங்கப்படவில்லை. நீண்ட நேரம் காத்திருந்தோம் மருத்துவரைச் சந்திக்காமலே என் உறவின் உயிர் பிரிந்து போனது என்ற குறைபடுதலுடன் கூடிய அழுகுரல்களுக்கும் யாழ். போதனா வைத்தியசாலையில் பஞ்சமில்லை என்ற உண்மையை இங்கு கூறித்தானாக வேண்டும்.

தவிர, என்னதான் இருந்தாலும் யாழ்.போதனா வைத்தியசாலை தான் எங்களின் தஞ்சம். என்னுடைய உயிரை-என் உறவின் ஆன்மாவை காப்பாற்றக் கூடிய ஒரே இடம் யாழ்.போதனா வைத்தியசாலை தான் என்ற நம்பிக்கையோடு வீட்டில் இருந்து வெளிக்கிடுகின்ற அந்த கணத்தின் பெறுமதியை யாழ்.போதனா வைத்தியசாலையின் ஒட்டுமொத்தச் சமூகமும் மானசீகமாக உணர்ந்து கொள்ள வேண்டும்.

அந்த உணர்தலும் புரிதலும் எழுகின்ற போது யாழ்.போதனா வைத்தியசாலையின் மூலை முடுக்கெங்கும் அன்பும் இரக்கமும் பரிவும் பாய்ந்தோடும்.

ஆயினும் அந்த உன்னதமான நிலை ஏற்பட்டு விட்டதா? என்றால் இல்லை என்ற பதிலுக்குள் பல காரணங்கள் புரையோடியுள்ளன.

நாளை தொடரும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சந்தைகளில் நேற்றைய விலை

பொருளாதார மத்திய நிலையம்

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார்மடம் | சாவகச்சேரி | கிளிநொச்சி | மட்டுவில் | வவுனியா |
|---|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 300 | 350 | 300 | 300 | 250 | 200 |
| உருளைக்கிழங்கு | 160 | 180 | 150 | 200 | -- | 350 |
| பச்சைமிளகாய் | 300 | 300 | 300 | 300 | 350 | 300 |
| தக்காளி | 100 | 130 | 150 | 200 | 150 | 150 |
| மரவள்ளிக்கிழங்கு | 200 | 180 | 200 | 200 | 180 | 100 |
| கோவா | 100 | 120 | 200 | 200 | 200 | 170 |
| கரட் | 250 | 350 | 400 | 300 | 350 | 300 |
| பூசணி | 120 | 120 | 150 | 150 | 100 | 90 |
| புடோல் | 150 | 200 | 200 | 200 | 150 | 150 |
| வாழைக்காய் | 200 | 180 | 150 | 200 | 120 | 170 |
| சின்ன வெங்காயம் | 250 | 300 | 300 | 250 | 250 | 220 |
| பெரிய வெங்காயம் | 160 | 180 | 200 | 180 | -- | -- |
| பாகற்காய் | 600 | 450 | 500 | 500 | 350 | 400 |
| வெண்டக்காய் | 250 | 300 | 200 | 300 | 250 | 225 |
| கருணைக் கிழங்கு | 300 | 280 | 300 | 300 | -- | 220 |
| பயற்றங்காய் | 400 | 450 | 400 | 400 | 300 | 180 |
| லீக்ஸ் | 350 | 300 | 400 | 300 | 280 | 260 |
| பீற்றூட் | 150 | 150 | 200 | 200 | 200 | 170 |
| கறிமிளகாய் | 550 | 600 | 400 | 400 | 500 | 550 |
| முருங்கைக்காய் | -- | 4000 | 4000 | -- | 2500 | -- |
| போஞ்சி | 350 | 250 | 400 | 300 | 300 | 300 |
| கத்தரிதம்புள்ள | 200 | 250 | 300 | 200 | -- | -- |
| கீரை – 1 பிடி | 140 | 80-140 | 200 | 100 | -- | 80 |
| தேசிக்காய் | 100 | 80 | 200 | 200 | 150 | 60 |
| தேங்காய் (ஒன்று) | 150 | 170 | 150 | 120-180 | -- | 120 |
| இராசவள்ளி | 450 | 550 | 300 | 400 | -- | 350 |
| வெங்காயப்பூ | 120 | 80 | 200 | 200 | -- | -- |
| முள்ளங்கி | 100 | 120 | 200 | 100 | 150 | 60 |
| பொன்னாங்காணி | 80 | 100 | 150 | 60 | -- | 50 |
| வல்லாரை | 60 | 70 | 100 | 80 | -- | 80 |
| ஈரப்பலா | 100 | -- | 100 | 150 | -- | 100 |

## வலிகாமம் மேற்கு பிரதேச சபை, சுழிபுரம் ஆதனப்பெயர் மாற்றம்

### ஆதன இலக்கம் 79, பெரிய தம்பிரான் கோவில் வீதி, வட்டாரம் 02

வலிகாமம் மேற்கு பிரதேசசபையின் அராலி உப அலுவலகத்திற்குட்பட்ட வட்டாரம் 02, பெரியதம்பிரான் கோவில் வீதி, ஆதன இலக்கம் 79 என்ற ஆதனத்திற்கான ஆதன வரிப்பதிவேட்டில் சுப்பிரமணியம் நவரத்தினம் என்ற பெயர் காணப்படுகின்றது. குறித்த ஆதனத்திற்கு பெயர்மாற்றத்திற்காக தங்கேஸ்வரன் சுகிர்தன் பெண் தோஜிகா என்பவர் விண்ணப்பித்துள்ளார்.

பெயர் மாற்றத்திற்குட்படும் ஆதனமானது ஆரம்பத்தில் பிரசித்த நொத்தாரிசு வே.த.மு.கதிர்காமநாதன் முன்பாக 2001.07.07 திகதியில் 3766 ஆம் இலக்கத்தில் அத்தாட்சிப்படுத்தப்பட்ட வெளிப்படுத்தல் உறுதியின் பிரகாரம் நமசிவாயம் கதீஸ்வரனும் பெண் ஜெயதேவியும் ஆகியோர்களுக்கு ஏற்கனவே கொள்வனவு செய்யப்பட்ட ஆதனத்தின் கிழக்குப் பக்கமாக நிலப்பரப்பு 1 குளி **7,1/2** திருமணத்தின் போது வாய் மூலமாக சீதனம் எனப் பொருத்தப்பட்டது என்றும் ஆனால் இற்றைவரை சீதன உறுதி நிறைவேற்றப்படவில்லை என்றும் 10 வருடங்களாக தமது தங்குதடையற்ற ஆட்சிக்குட்பட்டுள்ளது என்றும் இதன் காரணமாக உரித்து வந்ததாக வெளிப்படுத்தியிருந்தனர்.

அதன் பின்னர் குறித்த ஆதனத்தை கதீஸ்வரனும் பெண் ஜெயதேவியும் தமது மகளான தங்கேஸ்வரன் சுகிர்தன் பெண் தோஜிகாவுக்கு பிரசித்த நொத்தாரிசு வே.த.மு.கதிர்காமநாதன் முன்பாக 2009.08.09 திகதியில் 10517 ஆம் இலக்கத்தில் அத்தாட்சிப்படுத்தப்பட்ட சீதன உறுதியால் குறித்த ஆதனத்தினை சீதனமாக வழங்கியிருந்தனர்.

குறித்த ஆதனத்தின் விபரம் வருமாறு:
ஆதனப்பெயர் : **கண்டாக்குறுமன்**
இறை: அராலி கிழக்கு
விஸ்தீரணம் நிலப்பரப்பு 01 குளி 7.1/2

எல்லைகள் கிழக்கு: கதீஸ்வரன் பெண் ஜெயதேவியினாதனம், வடக்கு: ஒழுங்கை, மேற்கு: ஒழுங்கை, தெற்கு: ஒழுங்கை

இவ் ஆதனப் பெயர்மாற்றம் தொடர்பாக யாராவது ஆட்சேபனை இருப்பின் உரிய ஆவணங்களுடன் 30 நாட்களுக்குள் எழுத்து மூலம் அறியத்தருமாறும் அவ்வாறு உரிமை கோராதவிடத்து குறித்த ஆதனமானது தங்கேஸ்வரன் சுகிர்தன் பெண் தோஜிகா என்பவருக்கு பெயர் மாற்றம் செய்ய உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதுடன் இந்த ஆதனப் பெயர்மாற்றத்தால் வரக்கூடிய எந்த பொறுப்பிற்கும் வலிமேற்கு பிரதேச சபை பொறுப்பாளியல்ல என்பதனையும் தெரிவித்துக் கொள்கின்றேன்

**தவிசாளர் / செயலாளர்**
**வலிகாமம் மேற்கு பிரதேசசபை**

(ஔ)

## எரிவாயு தட்டுப்பாடு சோதனைகள் ஆரம்பம்

(கொழும்பு)

சமையல் எரிவாயு கொள்கலன்கள் தொடர்பாக, நுகர்வோர் விவகார அதிகார சபை நாடு தழுவிய ரீதியில் சோதனைகளை மேற்கொண்டு வருவதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

அதிக விலைக்கு விற்பனை செய்யும் நோக்கில் சில வர்த்தகர்கள் சமையல் எரிவாயு கொள்கலன்களைப் பதுக்கி வைத்திருப்பதாக கிடைத்துள்ள முறைப்பாடுகளை அடுத்து இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. குறித்த வர்த்தகர்களைக் கண்டறியும் பணிகள் தீவிரப்படுத்தப்பட்டுள்ளதாக நுகர்வோர் விவகார அதிகார சபை தெரிவித்துள்ளது.

லிட்ரோ மற்றும் லாஃப்ஸ் ஆகிய இரண்டு வகையான சமையல் எரிவாயு கொள்கலன்களுக்கும் நாடு முழுவதும் பாரிய தட்டுப்பாடு நிலவுவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

கடந்த இரண்டு வாரங்களாக எரிவாயு கிடைக்காததால், பல பகுதிகளில் உள்ள உணவகங்களும் மூடப்படும் அபாயத்தில் உள்ளதாக கூறப்படுகிறது. (நி)

# Invitation for Bids (IFB)

## Democratic Socialist Republic of Sri Lanka
## Valikamam North Pradeshiya Sabha, Kollankaladdy, Northern Province

### Bidding Documents for Procurement of Street Light

1. **The Chairman, Divisional Procurement Committee** on behalf of the **Valikamam North Pradeshiya Sabha, Kollankaladdy, Northern Province,** invites sealed bids from eligible and qualified bidders for the Procurement of Street Light as in table below **and all bids must be accompanied by a bid security and the validity periods of bid security are given in table below.**

| No | Bid No | Description of Goods | Employer's Estimated Cost (Rs. Mn) | Contract Period (Days) | Bid Validity Period | Bid Security Amount (Rs) | Bid Security Validity Period |
|---|---|---|---|---|---|---|---|
| 01 | NP/14/41(14)/03/Street Light(8)/PSDG/50W/2026 | Procurement Of Street Light | 1.64 | 30 days | 29.04.2026 | 17,000.00 | 27.05.2026 |
| 02 | NP/14/41(14)/03/Street Light(9) 30W/Cou/2026 | Procurement Of Street Light | 1.24 | 30 days | 29.04.2026 | 13,000.00 | 27.05.2026 |

2. Bidding will be conducted through National Competitive Bidding Procedure.
3. Interested eligible bidders may obtain further information on public working days between **09:00** hrs and **15:00** hrs from **25th February 2026 to 10th March 2026** from Valikamam North Pradeshiya sabha, Kollankaladdy and inspect the bidding documents at the same place on the above time.
   T.P No: 021 224 1130 E-mail: vnpskks@yahoo.com
4. Qualification requirements are include possessing the minimum 3 years' experience in selling and having Island wide maintenance in the particular brand and field. Additional details are provided in the bidding document.
5. A complete set of Bidding Document is English language may be purchased by interested bidders on submission of a written application to the address Valikamam North Pradeshiya sabha, Kolankaladdy. from **25th February 2026 until 10th March 2026 from 09.00 hrs to 15.00 hrs** on public working days and upon payment of non-refundable fee of Rs 2,500.00 (Including all Taxes). The method of payment should be by cash.
6. Complete Bids must be delivered to the address below in two copies as original and the duplicate. The original and duplicate should be enclosed separately and mark "Original" and "Duplicate" respectively in sealed envelopes. Both envelopes should be marked the **"Bid number"** on top left-hand corner of the envelop. Complete Bids should be delivered to **Chairman, Divisional Procurement Committee,** Valikamam North Pradeshiya sabha, Kollankaladdy on or before **11th March 2026 at 11.00 hrs.** Electronic bidding will not be permitted. Late bids will be rejected. Bids will be opened soon after closing in the presence of the bidders or their representatives who choose to attend in person.
7. The Pre-Bid Meeting will be held at Valikamam North Pradeshiya sabha, **Kollankaladdy** on **02nd March 2026** at 14.00 hrs, Interested Bidders May Participate in this Meeting their own expenses.
8. The Bid shall be valid up to 49 days after the deadline for Bid Submission. All bids shall be accompanied by Bid Security as stated in the Table above.

**Chairman,**
**Divisional Procurement Committee,**
**Valikamam North Pradeshiya Sabha,**
**Kollankaladdy.**

**25.02.2026**

(C-5049)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்பு மற்றும் உண்மையின் விழிப்புணர்வை ஏற்படுத்தி பிறரின் வாழ்வை ஒளிரச் செய்வோம்.
– அறிஞர்

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## நடமாடும் யாசகர்களை யார் கவனிப்பார்கள்

“பிச்சை” என்ற சொற்பதம் இப்போது “யாசகம்” என அழைக்கப்படுகிறது.

பிச்சை என்பது இரந்து பெறுவதைக் குறிக்கின்ற தக்க தமிழ்ச் சொல்.

***பிச்சை புகினும் கற்கை நன்றே*** என்கிறார் ஒளவையார்.

மற்றவர்களிடம் இரந்து பெற்றேனும் கற்றல் வேண்டும் என்பது ஒளவையார் கூறியதன் பொருளாம்.

இஃது பிச்சை என்ற சொல்லை மிகத் தாழ்ந்ததாக மனம் கொண்டு, அதற்கு மாற்றீடாக யாசகம் எனப் பொருள்படுத்தியவர்களுக்கான சிறுகுறிப்பு.

இது ஒருபுறமிருக்க, இப்போது பிச்சை எடுப்பவர்களின் எண்ணிக்கை நம் மண்ணில் அதிகரித்து வருவதை அவதானிக்க முடிகிறது.

அதிலும் யாழ்ப்பாணத்தில் இந்த எண்ணிக்கை கடுமையாக உயர்ந்துவிட்டது என்ற உண்மையை இங்கு கூறித்தானாக வேண்டும்.

இதை நாம் கூறும்போது, அதிகரிப்பு என்பது வறுமையின் நிமித்தம் மட்டும் ஏற்பட்டது என்ற முடிவுக்கு எவரும் வந்துவிட முடியாது.

மாறாக, மதுபோதைக்கு அடிமையானவர்களும் யாசிக்கின்றனர். குறிப்பாக யாழ்ப்பாண பஸ் நிலையத்தில் சிலர் மது போதைக்காக யாசிப்பதைக் காணலாம்.

சிலவேளைகளில் அவர்கள் மதுபோதையுடன் பேருந்து வண்டிகளில் ஏறி, அங்குள்ள பயணிகளிடம் யாசகம் பெறுகின்ற மிக மோசமான நிலைமைகளும் நடந்தாகின்றன.

இதற்கும் மேலாக, மேற்குறிப்பிட்டவர்கள் பஸ்தரிப்பு நிலையத்தில் தனித்து வருகின்ற பெண்களிடமும் மற்றும் வெளிநாட்டவர்களிடமும் கட்டாயப்படுத்தி யாசகம் கேட்பதையும் காணலாம்.

உண்மையில் யாசகம் பெற்றுச் சீவியம் நடத்துகின்ற அவலநிலை உண்டென்பதை நாம் மறுக்கவில்லை.

அதேநேரம் அத்தகையவர்கள் மிகவும் பக்குவமாக யாசகம் கேட்கின்றனர். அவர்கள் யாரையும் கட்டாயப்படுத்துவதில்லை.

தவிர, நேர்த்திக்கடன் என்ற போர்வையிலும் மடிப்பிச்சை என்ற பெயரிலும் வெள்ளிக்கிழமை தோறும் வர்த்தக நிலையங்களில் காசு வாங்குதல் என்ற வழமையிலும் யாசகம் நடந்தாகின்றன.

எதுஎவ்வாறாயினும் இப்போது யாழ்ப்பாணம் உள்ளிட்ட தமிழர் பகுதிகளுக்கு வெளிநாட்டு உல்லாசப் பயணிகள் வருகை தந்த வண்ணமுள்ளனர். இவர்களிடம் குறித்த நபர்கள் யாசகம் கேட்கும் போது, அஃது உல்லாசப் பயணிகளுக்கு மிகுந்த அசௌகரியத்தை ஏற்படுத்தும்.

அதேநேரம் எங்கள் தொடர்பில் அவர்களின் கருத்தியல் கீழ் நிலைப்பட்டதாக இருக்கும்.

சிலவேளைகளில் இதுபற்றி அவர்கள் தங்கள் நாடுகளில் குறிப்பிட்டுக் கூறுகின்ற நிலைமைகளும் ஏற்படலாம்.

எனவே நடமாடும் யாசகர்களைக் கட்டுப்படுத்தி அவர்களுக்கு வேண்டிய ஜீவனோபாய உதவிகளை வழங்குவதற்கு அரச நிர்வாக மட்டத்தில் விரைந்து நடவடிக்கை எடுக்க வேண்டும்.

# மரண தண்டனையை அமுல்படுத்துவது தொடர்பில் தீர்மானம் எடுக்கவில்லை

## அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ

இலங்கையில் மரண தண்டனையை அமுல்படுத்துவது குறித்து அரசாங்கம் இதுவரை எவ்விதத் தீர்மானமும் எடுக்கவில்லை என அமைச்சரவைப் பேச்சாளர் அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்துள்ளார்.

வாராந்த அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் ஊடக சந்திப்பில் நேற்றுக் கருத்துத் தெரிவிக்கும் போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து தெரிவிக்கையில்,

மரண தண்டனையை நடைமுறைப்படுத்துவது குறித்து அமைச்சரவை மட்டத்தில் எவ்வித கலந்துரையாடல்களும் இடம்பெறவில்லை.

இதுபோன்ற பாரதூரமான விடயம் குறித்து அமைச்சரவை மாத்திரம் தனித்து முடிவெடுக்க முடியாது என்றும் இது தொடர்பில் பொது மக்களிடையே பரந்தளவிலான கலந்துரையாடல்கள் அவசியமென்றும் அவர் குறிப்பிட்டார்.

அத்துடன் மரண தண்டனை அமுலில் உள்ள நாடுகளில் குற்ற வீதங்கள் குறைந்துள்ளனவா என்பது குறித்தும் சமூகவியல், உளவியல் மற்றும் குற்றவியல் ரீதியான தாக்கங்கள் குறித்தும் விரிவாக ஆராய்ந்த பின்னரே கொள்கை ரீதியான முடிவுகளை எடுக்க முடியும் என்றும் அவர் மேலும் தெரிவித்தார். (ம-7)

## மோசடியில் ஈடுபட்ட 16 சீனர்கள் கைது

விசா நிபந்தனைகளை மீறி இலங்கையில் தங்கியிருந்து, இணைய வழி ஊடாக சட்டவிரோதமான முறையில் (பிரமிட் முறை) பண மோசடியில் ஈடுபட்ட சீன பிரஜைகள் 16 பேர் கைது செய்யப்பட்டுள்ளதாகக் கறுவாத்தோட்டம் பொலிஸார் தெரிவித்தனர்.

சந்தேக நபர்களிடமிருந்து மடிக்கணினிகள் (Laptops) 23, கைத்தொலைபேசிகள் 11, திசைவிகள் (Routers) 7, குரல் மொழிபெயர்ப்பு இயந்திரங்கள் 9 மற்றும் வெளிநாட்டு தயாரிப்பு சிகரெட்டுகள் 3,280 கைப்பற்றப்பட்டுள்ளன.

கொழும்பு 05, ஜாவத்தை வீதி மற்றும் டொன் கரோலிஸ் வீதி ஆகிய இடங்களில் சில நாட்களுக்கு முன்னர் தற்காலிகமாக தங்கியிருந்த சீன பிரஜைகள் குழுவொன்று சட்டவிரோத செயலில் ஈடுபடுவதாகக் கறுவாத்தோட்டம் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரிக்குக் கிடைத்த தகவலுக்கமைய இந்தச் சோதனை முன்னெடுக்கப்பட்டுள்ளது.

அதற்கமைய குறித்த சீனப் பிரஜைகள் இலங்கையில் தங்கியிருந்து வெளிநாடுகளுடன் தொடர்புகளைப் பேணி பல்வேறு நபர்களை ஏமாற்றி பிரமிட் மோசடியில் ஈடுபட்டுள்ளமை பொலிஸ் விசாரணைகளில் தெரிய வந்துள்ளது. (ம-7)

## வளிமண்டலவியல் திணைக்களம் மீனவர்களுக்கு எச்சரிக்கை

(கொழும்பு)

இலங்கைக்கு வடகிழக்கே மத்திய வங்கக் கடல் பகுதியில் பயணிக்கும் மீனவர்கள் மற்றும் கடல்சார் சமூகத்தினர் அவதானத்துடன் இருக்குமாறு வளிமண்டலவியல் திணைக்களம் எச்சரிக்கை விடுத்துள்ளது.

வளிமண்டலவியல் திணைக்களத்தால் வெளியிடப்பட்ட வானிலை அறிக்கையிலேயே இவ்வாறு எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

அந்த அறிக்கையில், இலங்கைக்கு வடகிழக்கே மத்திய வங்கக் கடல் பகுதியில் நிலைகொண்டுள்ள குறைந்த அழுத்த பிரதேசம் கிழக்கு நோக்கி நகர்ந்து, அடுத்த 24 மணித்தியாலங்களுக்குள் மேலும் வலுவிழக்கும் என அந்த அறிவித்தலில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளது. (ம-7)

## 15 வயது மாணவன் வவுனியாவில் மரணம்

(வவுனியா)

வவுனியாவில் புற்றுநோய் காரணமாக 15 வயது மாணவன் ஒருவன் மரணமடைந்துள்ளான்.

புற்றுநோயால் பாதிக்கப்பட்ட குறித்த மாணவன் வவுனியா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்த நிலையில் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளான்.

வவுனியா நெளுக்குளம் கலைமகள் மகா வித்தியாலயத்தில் கல்வி கற்று வந்த 15 வயதுடைய சுரேஸ் ஸர்ணவன் என்ற மாணவனே இவ்வாறு உயிரிழந்துள்ளான். (ம-7,250)

## யாழ்.போதனாவில் மோ.சைக்கிள் திருட்டு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம்போதனா வைத்தியசாலை வளாகத்தில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த மோட்டார் சைக்கிள் ஒன்று திருடப்பட்ட சம்பவம் தொடர்பில் சந்தேகநபரைக் கைது செய்வதற்கு யாழ்ப்பாண தலைமையகப் பொலிஸார் பொதுமக்களின் உதவியை நாடியுள்ளனர்.

கடந்த 07 ஆம் திகதி யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலை வளாகத்தின் 06 ஆம் இலக்க வாயிலுக்கு முன்பாக நிறுத்தி வைக்கப்பட்டிருந்த கறுப்பு நிற HONDA ரக மோட்டார் சைக்கிள் ஒன்று திருடப்பட்டுள்ளது.

இது குறித்து யாழ்ப்பாணத் தலைமையக பொலிஸ் நிலையத்தில் உத்தியோகபூர்வமாக முறைப்பாடு பதிவு செய்யப்பட்டுள்ளது.

கிடைக்கப்பெற்ற முறைப்பாட்டின் அடிப்படையில் பொலிஸார் மேற்கொண்ட ஆரம்பகட்ட விசாரணைகளின் போது திருட்டு இடம்பெற்ற பகுதியில் இருந்த CCTV கமராக் காட்சிகள் ஆய்வு செய்யப்பட்டன. இதன் மூலம் குறித்த திருட்டுச் சம்பவத்துடன் தொடர்புடைய சந்தேக நபரின் புகைப்படம் பொலிஸாரால் கண்டறியப்பட்டுள்ளது.

குறித்த சந்தேகநபரைக் கைது செய்வதற்காகப் பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். (ம-7)

## பாதாளக் குழுக்களை கட்டுப்படுத்த அரசு தவறியுள்ளது

### ஐக்கிய மக்கள் சக்தி குற்றச்சாட்டு

பாதாள உலகக் குழுக்களை முற்றாக இல்லாதொழிப்போம் என ஒருபுறம் சூளுரைத்து வரும் ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்க தலைமையிலான அரசு, நடைமுறையில் அக்குழுக்களின் அட்டகாசத்தைக் கட்டுப்படுத்தத் தவறியுள்ளது என்று ஐக்கிய மக்கள் சக்தியின் பொதுச்செயலாளர் ரஞ்சித் மத்தும பண்டார எம்.பி. குற்றம் சாட்டியுள்ளார்.

ஊடகங்களிடம் நேற்றுக் கருத்துத் தெரிவித்த போதே அவர் இந்தக் குற்றச்சாட்டை முன்வைத்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது,

நாட்டின் சட்ட ஒழுங்கு மற்றும் பாதுகாப்பை உறுதிப்படுத்துவதாகக் கூறி ஆட்சிக்கு வந்த இந்த அரசு, இன்று பாதாள உலகக் குழுக்களின் கைகளில் சிக்கிக் கொண்டுள்ளது.

சட்டத்தரணிகள், அரசியல்வாதிகள், வர்த்தகர்கள் மற்றும் பொதுமக்கள் எனப் பலரும் பகிரங்கமாகச் சுட்டுக் கொல்லப்படுகின்றனர்.

பாதாள உலகத்தை ஒழிப்பதாகக் கூறும் அரசின் வாக்குறுதி வெறும் மேடைப் பேச்சாகவே முடிந்துவிட்டது என்றார். (ம-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அடாவடிக் கோட்டை

## அமெரிக்க உளவுத்துறை சிஐஏ வரலாறு

31

என்.சொக்கன்

அமெரிக்காவுக்கும் தனக்கும் ஒத்துவராது என்று தீர்மானித்து விட்டார்.

இதற்குமுன்பே, பின்லேடனின் அல்காய்தா இயக்கம் தொடங்கப்பட்டு விட்டது. ஒஸாமாவும் அவரது இயக்கத்தைச் சேர்ந்தவர்களும், சோவியத்-ஆப்கான் யுத்தத்தின் இறுதிக் கட்டங்களில் மிக முக்கியமான பங்களிப்பைச் செய்திருந்தார்கள்.

அல்காய்தா தொடங்கப்படுவதற்கு முன்பிருந்தே ஒஸாமாவின் படையினருக்கு சிஐஏ ஆயுதங்களும் பயிற்சியும் வழங்கி வந்தார்கள். அதன் பிறகும், பிற ஆப்கான் போராளிகளைப் போலவேதான் அல்காய்தாவுக்கும் சிஐஏ உதவிக் கொண்டிருந்தது. மற்றபடி, அவர்களுக்கு எந்த விசேட மரியாதையோ கவனமோ கிடையாது.

ஆனால், ஒஸாமா இந்த வாய்ப்பை நன்றாகப் பயன்படுத்திக் கொண்டார். ரஷ்யாவின் முக்கிய நகரங்களைத் தாக்குவது எப்படி, சோவியத் அரசில் குழப்பம், கலவரம் உண்டாக்குவது எப்படி என்று விதவிதமாக சிஐஏ கற்றுத்தந்த உத்திகளை பின்னர் அவர்களுக்கு எதிராகவே பயன்படுத்தத் தீர்மானித்திருந்தார் அவர்.

பின்லேடனின் இந்த உள்நோக்கம், சிஐஏவுக்குத் தெரியவில்லை. அதனால், அமெரிக்காவுக்கும் தெரியவில்லை. அவர்கள் எப்போதும்போல், அல்காய்தாவைப் பத்தோடு பதினொன்றான ஓர் இயக்கமாகதான் கருதிக்கொண்டிருந்தார்கள். ஒஸாமா & கோ சோவியத்தின் விரோதிகள், ஆகவே, நமது நண்பர்கள் என்று கணக்குப் போட்டிருந்தார்கள்.

ஆனால், அப்போது அவர்களுக்குப் புரியாத ஒரு விடயம். ஒஸாமாவின் கோபம் சோவியத் மீது அல்ல. ஆப்கானிஸ்தான் என்கிற இஸ்லாமிய தேசத்தின்மீது அவர்கள் படையெடுத்ததுதான் அவருக்குப் பிடிக்கவில்லை. தீவிரமான மத அடிப்படைவாதக் கொள்கைகளோடு வளர்ந்த ஒஸாமா பின்லேடன், இஸ்லாமுக்கு எதிராக என்ன நடந்தாலும் பொங்கி எழுவார், அதற்காக யாரையும் பகைத்துக்கொள்ளத் தயங்கமாட்டார் என்பதை அமெரிக்கா அறிந்திருக்கவில்லை.

இதனால், அவர்கள் ஒஸாமா இன்னும் நம் கட்சியில்தான் இருக்கிறார் என்று நினைத்துக் கொண்டிருந்தார்கள். ஆனால் அவர், கொஞ்சம் கொஞ்சமாக விலகி, வேறொரு இரகசியப் பாதையில் நடந்து கொண்டிருந்தார்.

ஈராக் ஜனாதிபதி சதாம் உசேன், குவைத்தை ஆக்கிரமித்தபோது, சவுதி அரேபியா அவருக்கு எதிரான ஒரு நிலைப்பாட்டை எடுத்திருந்தது. இதனால், சதாம் சவுதியையும் தாக்கக் கூடிய அபாயம் உண்டு என்றது சிஐஏ.

பயந்துபோன சவுதி அரசர், அமெரிக்காவின் உதவியைக் கேட்டார்.



சதாம் உசேன் தோற்கடிக்கப்படும் வரை அமெரிக்க இராணுவம் சவுதி அரேபியா வந்து பாதுகாப்பு கொடுப்பது என்று ஏற்பாடானது.

சவுதி அரேபியாவில் பிறந்து வளர்ந்த ஒஸாமாவுக்கு இது பிடிக்கவில்லை. நம் ஊரைப் பாதுகாப்பதற்கு அடுத்தவன் எதற்கு? அதுவும், அமெரிக்காவிடம் போய் உதவி கேட்கலாமா? புனிதமான சவுதி மண்ணில் அவர்கள் கால் பதிப்பது அசிங்கமில்லையா?

"சதாம் உசேனை நான் சமாளிக்கிறேன்" என்றார் ஒஸாமா பின்லேடன். நமுட்டுச் சிரிப்போடு, "அதெல்லாம் சரிப்படாது" என்று சொல்லிவிட்டார் சவுதி அரசர்.

பின்லேடன் நொந்துபோய்விட்டார். தன்னை அரசர் நம்பவில்லை என்பது ஒரு வேதனை. அதைவிட முக்கியமாக, சவுதியைப் பாதுகாக்கிறேன் பேர்வழி என்று அமெரிக்க இராணுவம் இங்கே நுழைந்து என்னவெல்லாம் அட்டகாசங்கள் செய்யப் போகிறதோ என்பது அவருடைய முக்கியமான கவலை.

சவுதி அரசர் கேட்டுக்கொண்டபடி, அமெரிக்க இராணுவத்தின் ஒரு பிரிவினர் சவுதி அரேபியாவில் முகாம் இட்டார்கள். துப்பாக்கியும் கையுமாக ஊரைச் சுற்றிவந்தார்கள்.

வளைகுடாப் போரின்போது, சதாமுக்கு அவருடைய சொந்த ஊரிலேயே ஏகப்பட்ட பிரச்சினைகள், தலைவலிகள். ஆகவே, இந்த நிலைமையில் அவர் சவுதியை நேரடியாகவோ, மறைமுகமாகவோ தாக்க முயற்சி செய்யவில்லை.

ஒருவழியாகப் போர் முடிந்தது. சதாம் தோற்கடிக்கப்பட்டுவிட்டார். இனிமேல் அவரால் சவுதி அரேபியாவுக்கு ஆபத்து இல்லை என்றானதும், அமெரிக்க இராணுவம் கிளம்ப வேண்டியதுதானே?

பின்லேடன் எதிர்பார்த்தது போலவே அவர்கள் சவுதியை விட்டுப் போகவில்லை. நிரந்தரமாக இங்கேயே கால் மேல் கால் போட்டுக்கொண்டு உட்கார்ந்து விட்டார்கள். இதையெல்லாம் பார்த்துக்கொண்டு சவுதி அரசரும் சும்மா இருக்கிறார்.

ஒஸாமாவுக்கு ஆத்திரம் தாங்கவில்லை. அமெரிக்காவிடம் வேறு சில உதவிகளை எதிர்பார்த்துதான் சவுதி அரசாங்கம் இப்படி நடந்து கொள்கிறது என்பதைப் புரிந்து கொண்டார் அவர். அந்த விநாடியிலிருந்து, அவர் சவுதி அரசருக்கு எதிராகச் செயற்படத் தீர்மானித்துவிட்டார்.

சவுதி அரசர், அமெரிக்காவின் கூட்டாளி. அப்படியானால், அவருக்கு எதிராகச் செயற்படுகிற பின்லேடன், அமெரிக்காவின் விரோதிதானே?

அவ்வளவுதான். அதுவரை சிஐஏவின் பார்வையில் ஒரு போராளியாகத் தெரிந்துகொண்டிருந்த ஒஸாமா பின்லேடன் இப்போது ஒரு தீவிரவாதியாகத் தோன்ற ஆரம்பித்தார். பல ஆண்டுகளாகத் தீவிரவாதத் தடுப்பு நடவடிக்கைகளில் ஈடுபட்டுவரும் சிஐஏ, அதுவரை அல்காய்தாவைத் தடுக்கவோ, கட்டுப்படுத்தவோ எதையும் செய்ததில்லை. எதற்கும் இருக்கட்டும் என்று அவர்களைப்பற்றிய தகவல்களை மட்டும் திரட்டிக் கொண்டிருந்தார்களே தவிர, அதை அமெரிக்க அரசாங்கத்துக்குச் சுட்டிக்காட்டவோ, உள்ளூர் சவுதி அரசரின் உதவியுடன் அல்காய்தாவை முடக்கவோ முயற்சி செய்யவில்லை.

இப்போது, பின்லேடன் சவுதி அரசாங்கத்துக்கு எதிராகவே ஃபத்வா (மரண தண்டனை) அறிவித்து விட்டார். அவருடைய அடுத்த குறி, அமெரிக்காவாகத்தான் இருக்கும் என்று புரிந்துகொண்டது சிஐஏ.

அப்போதிலிருந்து, அல் காய்தாமீது சிஐஏ தனது பார்வையை அழுத்தமாகப் பதித்துவிட்டது. அதைப் பற்றிக் கவலைப்படாமல், அமெரிக்காவுக்கு எதிராகக் காய்களை நகர்த்தத் தொடங்கியிருந்தார் ஒஸாமா.

சவுதிக்கு எதிரான ஃபத்வாவைத் தொடர்ந்து, அமெரிக்காவுக்கு எதிராகவும் அல்காய்தா ஒரு ஃபத்வா வெளியிட்டது. இந்தத் தகவலை அறிந்துகொண்ட சிஐஏ, முதன்முறையாக, அமெரிக்க அரசாங்கத்துக்கு ஒஸாமா பற்றிய ஓர் எச்சரிக்கைக் குறிப்பை அனுப்பியது.

அந்த "முதல் ஃபத்வா"வின் மூலம் அல்காய்தா விடுத்திருந்த மிரட்டல் மிக நேரடியானது-சவுதி அரேபியாவிலிருந்து அமெரிக்கப் படைகள் உடனடியாக வெளியாக வேண்டும். இல்லாவிட்டால், அவர்களைத் தாக்கி வெளியேற்றுவோம்.

இதைப் படித்ததும், அமெரிக்காவுக்குச் சிரிப்புதான் வந்தது. ஊர் பேர் தெரியாமல் மறைந்து செயற்படுகிற ஓர் இயக்கம், நம்முடைய படைகளைத் தாக்கி வெளியேற்றப் போகிறதா? நல்ல கதை!

தவிர, இஸ்லாமிய ஷரியத் சட்டங்களை நன்கு பயின்ற அறிஞர்கள் மட்டும்தான், அந்தச் சட்டங்கள் மீறப்படும்போது ஃபத்வா வெளியிட முடியும். ஆகவே, ஒஸாமா பின்லேடன் வெளியிட்டிருப்பது ஃபத்வாவே அல்ல. (தொடரும்....)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வவுனியாவில்...

பட்டுள்ளதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.


அந்தப்பகுதியில் சடலம் ஒன்று உள்ளமை தொடர்பாக ஈரப்பெரிய குளம் பொலிஸாருக்கு நேற்றுக் காலை தகவல் வழங்கப்பட்டிருந்தது.

இதனையடுத்து அந்தப் பகுதிக்குச் சென்ற பொலிஸார் சடலத்தை மீட்டனர்.

சுமார் 40-45 வயது மதிக்கத்தக்க ஒருவரே சடலமாக மீட்கப்பட்டுள்ளதுடன் இதுவரை சடலம் அடையாளம் காணப்படவில்லை.

அவரது உடலில் சிறுபகுதி தீயினால் எரிந்து காணப்படுவதுடன் குறித்த சம்பவம் தொடர்பாக பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். (ம-7,250)



















## ஒரு தசாப்தத்தை...

வவுனியாவில் காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகளினால் நேற்று கவனயீர்ப்பு ஆர்ப்பாட்டம் ஒன்று முன்னெடுக்கப்பட்டிருந்தது.

காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகளின் போராட்டமானது பத்தாவது வருடத்தை எட்டியதை முன்னிறுத்தி இவ் ஆர்ப்பாட்டம் இடம்பெற்றிருந்தது.

வவுனியாவில் 3291 நாளாக காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளினால் போராட்டம் மேற்கொள்ளப்படும் இடத்திலேயே குறித்த ஆர்ப்பாட்டமானது இடம்பெற்றிருந்தது.

இதன்போது உறவுகள் காணாமல் போனோரின் படங்களினை ஏந்தியவாறும், அமெரிக்க மற்றும் ஐரோப்பிய ஒன்றியக் கொடிகளை ஏந்தியவாறும் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டிருந்தனர். (ம-7)

## மோ.சைக்கிள்...

மேற்கொண்ட வீதிச் சோதனையின் மூலம் 30க்கும் மேற்பட்ட மோட்டார் சைக்கிள்கள் பறிமுதல் செய்யப்பட்டுள்ளன.

சாரதி அனுமதிப்பத்திரம் இன்மை, வீதி ஒழுங்குகளை கடைப்பிடிக்காமை மற்றும் மது போதையில் பயணித்தோர் என பல்வேறு குற்றச்சாட்டுக்களில் மோட்டார் சைக்கிள்கள் பறிமுதல் செய்யப்பட்டுள்ளன.

குறித்த சம்பவத்துடன் தொடர்புடைய சந்தேக நபர்கள் விடுவிக்கப்பட்டுள்ளதுடன் தடயப் பொருட்களை நீதிமன்றில் முற்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக கிளிநொச்சி பொலிஸார் தெரிவித்தனர். (ம-7,316)

## சுவாமி கைலா..

இந்தியாவின் அயோத்தி நகரில் உள்ள சிவன் கோவிலின் தலைமைச் சுவாமி கைலாசானந்த் கிரி ஜி மகாராஜ் நேற்று செவ்வாய்க்கிழமை யாழ்ப்பாணத்துக்கு விஜயம் செய்தார்.

முன்னதாக மன்னார் திருக்கேதீச்சரத்துக்கு விஜயம் செய்த சுவாமிகள் கீரிமலை நகுலேஸ்வர ஆலயத்திலும் வழிபாட்டில் ஈடுபட்டார்.

யாழ்ப்பாணத்துக்கு விஜயம் செய்த சுவாமிகளை வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகன் வரவேற்றிருந்தார். (ம-7)

## கிவுல் ஓயாத்...

பொன்னம்பலம், து.ரவிகரன், ப.சத்தியலிங்கம், முன்னாள் பாராளுமன்ற உறுப் பினர் சுரேஷ் பிறேமச்சந்திரன், தவத்திரு வேலன் சுவாமிகள், சட்டத்தரணி ஐங்கரன் குகதாசன் பேராசிரியர் எஸ்.ரகுராம், யாழ்.பல்கலைக்கழக மாணவர் ஒன்றிய பிரதிநிதிகள், எல்லைக் கிராமங்களைச் சேர்ந்த மக்கள், சிவில் சமூக அமைப்புக்களின் பிரதிநிதிகள், ஊடகவியலாளர்கள் என பலரும் கலந்துகொண்டிருந்தனர்.

பிற்பகல் 2 மணிக்கு ஆரம்பமான மேற்படி கலந்துரையாடலில், கிவுல் ஓயாத் திட்டத்தின் ஊடாக தமிழ் மக்களின் நிலங்கள் அபகரிக்கப்படும் விவகாரம் மற்றும் சுற்றுச்சூழல் பாதிப்புகள், யானை மனித மோதல் போன்ற பாதகமான விளைவுகள் தொடர்பாக ஆராயப்பட்டதுடன், இந்த திட்டத்தின் ஊடாக அரசாங்கம் அடைய நினைக்கும் மறைமுக இலக்குகள் தொடர்பாகவும் ஆராயப்பட்டுள்ளது.

விஷேடமாக பாராளுமன்ற உறுப்பினர்களான து.ரவிகரன் மற்றும் ப.சத்திலிங்கம் ஆகியோர் முல்லைத்தீவு, வவுனியா மாவட்டங்களில் ஏற்படவுள்ள பாதிப்புகள் தொடர்பான விடயங்களைச் சுட்டிக்காட்டினர்.

கலந்துரையாடலின் நிறைவில் ஊடகவியலாளர்கள், அரசியல் தரப்புகள், பல்கலைக்கழக மாணவர்கள் மற்றும் சிவில் சமூக அமைப்புகள் கூட்டாக இணைந்து எல்லைக் கிராமங்களுக்கு கள விஜயம் செய்வது எனவும், கலந்துரையாடப்பட்ட விடயங்கள் தொடர்பான கூட்டறிக்கையை உள்நாட்டிலுள்ள முற்போக்கு அமைப்புகளுக்கும் சர்வதேச அமைப்புகளுக்கும், தூதுவராலயங்களுக்கும் சமர்ப்பிப்பது எனவும் தீர்மானிக்கப்பட்டது. (ம-7)

## யாழ்ப்பாணம்...

யாழ்ப்பாணம் பொருளாதார மத்திய நிலையத்தை மேம்படுத்தல் தொடர்பான கலந்துரையாடல் வர்த்தக வாணிப உணவு பாதுகாப்பு மற்றும் கூட்டுறவு அபிவிருத்தி அமைச்சின் கூட்டுறவு சேவைகள் பிரதி அமைச்சர் உபாலி சமரசிங்கவின் தலைமையில் நேற்று (24) யாழ்ப்பாணம் பொருளாதார மத்திய நிலையத்தில் நடைபெற்றது.

இக்கலந்துரையாடலில் யாழ்ப்பாண மாவட்ட அரசாங்க அதிபர் மருதலிங்கம் பிரதீபன், அமைச்சின் மேலதிகச் செயலாளர் உபல் சாந்த டி அல்வீஸ், தேசிய விவசாய சந்தை சேவைகள் லிமிடெட் தலைவர் வசந்த கே. பி. சேனநாயக்க, சாவகச்சேரி பிரதேச செயலாளர் F.C. சத்தியசோதி ஆகியோர் பங்கு பற்றினார்கள்.

குறித்த கலந்துரையாடலில் விசேட பொருளாதார மத்திய நிலையங்களை முகாமையிடும் பொருட்டு நிறுவப்பட்ட தேசிய விவசாய சந்தை சேவைகள் லிமிடெட் நிறுவனத்தினைக் கூட்டிணைத்தல் மற்றும் மேம்படுத்தலுக்கான வழிவகைகள் ஆராயப்பட்டதுடன், நாட்டிலுள்ள 18 பொருளாதார மத்திய நிலையங்களின் முகாமையினை ஒரே நிறுவனத்தின் கீழ் செயற்படுத்துவது தொடர்பாகவும் தெளிவுபடுத்தப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

யாழ் மாவட்ட விவசாய சம்மேளனத்தின் தலைவர், செயலாளர், உறுப்பினர்கள், பிரதேச சபையின் செயலாளர், ஒருங்கிணைப்புக் குழுவின் பிரதிநிதி, சாவகச்சேரி பொலிஸ் நிலைய உத்தியோகத்தர்கள், பொருளாதார மத்திய நிலைய கடை குத்தகைக்காரர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர். (ம-7,33)

வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
076 636 3378,
076 097 3127






















Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## புலம்பெயர்...

வடக்கு மாகாண ஆளுநரிடம் பிரான்ஸ் மற்றும் ஜேர்மன் தூதுவர்கள் கேள்வி எழுப்பியுள்ளனர்.

வடக்கு மாகாணத்துக்கு உத்தியோகபூர்வ பயணத்தை மேற்கொண்டிருந்த இலங்கைக்கான பிரான்ஸ் தூதுவர் ரெமி லம்பேர்ட் மற்றும் ஜேர்மன் தூதுவர் பீலிக்ஸ் நியூமன் ஆகியோர் நேற்று முன்தினம் திங்கட்கிழமை வடக்கு மாகாண ஆளுநரைச் சந்தித்துக் கலந்துரையாடினர்.

இச்சந்திப்பின்போது, புலம்பெயர் தமிழர்கள் வடக்கில் முதலீடு செய்ய அதிக ஆர்வம் காட்டி வரும் நிலையில், அதற்கான வழிமுறைகள் இலகுபடுத்தப்பட்டுள்ளனவா? எனத் தூதுவர்கள் எழுப்பிய வினாவுக்குப் பதிலளித்த ஆளுநர், "தற்போதைய அரசாங்கம் முதலீடுகளைப் பெரிதும் ஊக்குவிக்கின்றது. அதற்கான சகல வழிகளும் திறக்கப்பட்டுள்ளன. எனவே, புலம்பெயர் முதலீட்டாளர்கள் எவ்வித தயக்கமுமின்றி தங்களது முதலீட்டு முயற்சிகளில் ஈடுபட முடியும்" என உறுதிபடத் தெரிவித்தார். (ம-7)

## சர்வதேச...

அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் நேற்றைய வாராந்த ஊடகவியலாளர் சந்திப்பின் போதே அவர் இதனைத் திட்டவட்டமாகத் தெரிவித்தார்.

மண்டைதீவில் அமையவுள்ள இந்த மைதானத்துக்கான கட்டுமானப் பணிகளை, முறையான சுற்றுச்சூழல் அனுமதிச் செயல்முறைகள் பூர்த்தியாகும் வரை தற்காலிகமாக நிறுத்துமாறு மத்திய சுற்றாடல் அதிகார சபை அறிவுறுத்தியுள்ளது.

இது குறித்து ஊடகவியலாளர்கள் எழுப்பிய கேள்விக்குப் பதிலளிக்கும் போதே அமைச்சர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அமைச்சர் மேலும் கருத்துத் தெரிவிக்கையில், யாழ்ப்பாணத்தில் சர்வதேச கிரிக்கெட் மைதானக் கட்டுமானப் பணியானது நிச்சயம் முன்னெடுக்கப்பட வேண்டும் என்பதில் அரசு உறுதியாக உள்ளது.

எனவே, சம்பந்தப்பட்ட சகல அமைச்சுகளுடனும் இணைந்து ஒரு கூட்டு முயற்சியாக இதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. மைதானம் அமைக்கும் வேலைத்திட்டத்தை எவ்விதத் தடையுமின்றி விரைவில் முடிக்க வேண்டும் என்பதே எமது எதிர்பார்ப்பாகும் என்றார். (ம-7)

## இராணுவத்தின்...

தவிசாளர் உதயகுமார் யுகதீஸ் தலைமையில் நேற்று செவ்வாய்க்கிழமை (24)காலை 10.20 மணியளவில் நடைபெற்றது.

சபையில் தவிசாளர் தனது தலைமை உரையில் அனைத்து உறுப்பினர்களும் மக்களால் தெரிவு செய்யப்பட்டவர்கள், மக்களுக்கு தரமான சேவையை வழங்கவேண்டும் என்று கோரிக்கைவிடுத்தார்.

தொடர்ந்து பயங்கரவாதத் தடை சட்டத்தை நீக்க கோரியும் புதிதாக கொண்டு வரப்பட இருக்கின்ற பயங்கரவாதத்திலிருந்து அரசைப் பாதுகாக்கின்ற சட்டத்தை வாபஸ் பெறக்கோரியும் சபையில் தீர்மானம் நிறைவற்றப்பட்டது.

இதில் சபை அமர்வில் கலந்து கொண்ட 19 உறுப்பினர்களில் 15 உறுப்பினர்கள் ஆதரவாக வாக்களித்தனர்.

தொடர்ந்து பருத்தித்துறை பிரதேச சபைக்கு உட்பட்ட பகுதிகளில் இராணுவத்தினர் வியாபார நடவடிக்கைகளில் ஈடுபடக்கூடாது என்றும் ஏகமனதாகத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. (ம-7,60)


## மணப்பெண் தேவை

01.வட்டுக்கோட்டை, இந்து, 1988, பூசம், Data Analysis, Australia Citizen மாப்பிள்ளைக்குப் பெண் தேவை.(45522)
02.K.K.S, இந்து, 1993, விசாகம், Masters, Canada Citizen மாப்பிள்ளைக்குப் பெண் தேவை.(43203)
03.இணுவில், இந்து, 1990, அனுஷம், Quantity Surveyor, Australia Citizen மாப்பிள்ளைக்குப் பெண் தேவை. (34984)
04.நீர்வேலி - புலோலி, இந்து, 1991, பூரட்டாதி, Bsc, USA Citizen மாப்பிள்ளைக்குப் பெண் தேவை.(32143)
05.காரைநகர், இந்து, 1989, சித்திரை, Bachelor, UK Citizen மாப்பிள்ளைக்குப் பெண் தேவை.(41733)
06.கொக்குவில் - உடுவில், இந்து, 1988, திருவோணம், Civil Engineer, Australia Citizen, Divorce மாப்பிள்ளைக்குப் பெண் தேவை.(52796)
07.வட்டுக்கோட்டை, இந்து, 1992, விசாகம், CIMA Qualifier, Canada Citizen மாப்பிள்ளைக்குப் பெண் தேவை. (33308)
08.உரும்பிராய், இந்து, 1979, கேட்டை, Travel and Tourism management, Divorce, New zealand Citizen மாப்பிள்ளைக்குப் பெண் தேவை.
09.வண்ணார்பண்ணை, இந்து, 1987, சித்திரை, Masters, (MBA), Canada Citizen மாப்பிள்ளைக்குப் பெண் தேவை.
10.திருநெல்வேலி, இந்து, 1994, ஆயிலியம், Bsc in computer science, UK Citizen மாப்பிள்ளைக்குப் பெண் தேவை. (34159)

நீங்களாகவே எமது www.thaalee.com என்கின்ற website இல் உங்களுக்குப் பொருத்தமானவர்களைத் தெரிவு செய்து கொள்ளலாம். எல்லா விதமான ஜாதியிலும், Unmarried, Divorce என்பன உண்டு. (6881)

S.Sharma J.P
www.thaalee.com
077 992 1494
077 539 3728

## இந்திய சாஸ்திரியார் வருகை

சிங்கப்பூர், மலேசியா மற்றும் பல நாடுகளில் புகழ் ஓம் சக்தி அருள்வாக்கு பெற்ற இரத்தினசாமி சாஸ்திரியார் அவர்கள் யாழ்.வருகை, ஜாதகம், கைரேகை, எண்கணிதம் மற்றும் தொழில் முன்னேற்றம் இன்மை புதிய தொழில் தொடங்க, திருமணத்தடை, வாழ்வில் தோல்வி, குடும்பத்தில் பிரச்சினை, வெளிநாடு செல்லத்தடை, கல்வியில் தடை, குழந்தை பாக்கியம் மற்றும் எந்தப் பிரச்சினைக்கும் நேரில். (C-5052)

074 196 4945
இல.90, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

## உடனடி வேலைவாய்ப்பு

Restaurant ஒன்றிற்கு வேலையாட்கள் தேவை.
- WAITER
- KITCHEN HELPER
- MEAT/ VEG CUTTER

- சம்பளம் நேரில் பேசித் தீர்மானிக்கப்படும்.
- தேவைப்படின் தங்குமிடம் வழங்கப்படும்.
- வெளிமாவட்டத்தவர்களும் விண்ணப்பிக்கலாம். (6917)

தொடர்பு : 076 175 4225



## இலங்கையில் இருந்து கனடாவிற்கு

கப்பல் மூலம் பொதிகளை அனுப்ப
10-19 Kg - 1000/Kg
20-49 Kg - 900/Kg
50Kg இற்கு மேல் - 800/Kg
DELIVERY ▶ 2-3 Months
எமது நேரடி கிளைகள்: திருகோணமலை, வவுனியா, கொழும்பு, மட்டக்களப்பு, புதுக்குடியிருப்பு, முல்லைத்தீவு, மன்னார், கிளிநொச்சி, கோப்பாய், சுன்னாகம், கொடிகாமம், சாவகச்சேரி, யாழ்ப்பாணம், சங்கானை, மானிப்பாய், பண்டத்தரிப்பு, பருத்தித்துறை, வல்வெட்டித்துறை, புத்தூர், நெல்லியடி (C-5055)
V2 TRAVELS
076 822 6244
076 455 0672

## காணி விற்பனைக்கு

தொண்டைமானாறு செல்வச்சந்நிதி ஆலயத்திற்கு மேற்கே அச்சுவேலி - தொண்டைமானாறு வீதியில் (ஆற்றங்கரைக்கு மேற்கு) 6 பரப்புக் காணி விற்பனைக்குண்டு. (6907)

077 466 2103, 077 590 1113

## வேலையாட்கள் தேவை

வவுனியாவில் இயங்கி வரும் வெளிநாட்டுப் பொதிகள் சேவை நிறுவனம் ஒன்றிற்கு முன்னனுபவம் உள்ள ஆண், பெண் இருபாலாரும் தேவை. (2084)

076 889 1308
077 606 1333

## 1 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

அமரர்
சுப்பிரமணியம் கமலநாதன்



கண் மகிழ 18.05.1947
கண் நெகிழ 08.03.2025
திதி: நவமி

பார் போற்றும் இந்திரனாய்!
பாரினிலே பல சேவைகள் புரிந்து
காலமெல்லாம் எம்மைக் காத்து
நாளெல்லாம் எமக்கு
அறிவுரை சொல்லி!
வளர்த்த எம் அன்புத் தெய்வமே
நிதமும் உம் நாமம் எம் நாவில்
என்றென்றும் ஒலித்திடவே
காத்திடுவோம் உங்கள் பணி.

தம்பாலை வருணன்,
அச்சுவேலி. (C-5056)

தகவல் -
குடும்பத்தினர்

வங்கியில் அடகு வைத்த நகைகளை மீட்க முடியவில்லையா? நாம் மீட்டுத்தருகின்றோம்

## ஆகாஸ் நகை மாடம்

யாழ்ப்பாணம், நெல்லியடி, பருத்தித்துறை, சாவகச்சேரி, கொடிகாமம், கிளிநொச்சி, மானிப்பாய், சுன்னாகம், அச்சுவேலி, சங்கானை, வல்வெட்டித்துறை, உடுப்பிட்டி, காரைநகர், வவுனியா, மன்னார் ஆகிய பகுதிகளில்

வங்கியில் அடகு வைக்கப்பட்ட அடகு நகைகளை நகைக்கேற்ப பெறுமதியைப் பார்த்து வங்கியிலேயே பணத்தைத் தந்து வாங்கப்படும். (C-5054)

076 825 7716 (ஆகாஸ்)

வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
076 636 3378,
076 097 3127

## வேலையாட்கள் தேவை

கொடிகாமத்தில் அமைந்துள்ள Fancy மற்றும் புடைவைக் கடைக்கு பெண் வேலையாட்கள் தேவை.

- வயது : 18 - 30
- அருகில் உள்ளவர்கள் அதிகம் விரும்பத்தக்கது.
- அனுபவம் விரும்பத்தக்கது.
- சம்பளம் : 25,000/= (C-5053)

தொடர்பு : 077 811 8948

## காணி விற்பனைக்குண்டு

யாழ்ப்பாணம் நாவற்குழியில் 24 பரப்புக் காணி விற்பனைக்குண்டு.
அமரா வீதியில்

- இரண்டு பரப்பாகவும் 1½ பரப்பாகவும் பிரிக்கப்பட்ட நிலையில்
- ஒரு பரப்பின் விலை முன்பகுதி 8 இலட்சம், பின்பகுதி 7 இலட்சம் மூன்றாம் பகுதி 6 இலட்சம்
- நாவற்குழி சந்தியில் இருந்து ½ கிலோ மீற்றர் தூரம்
- அமரா வீதி முகப்புடன்
- A9 வீதியில் இருந்து 250 மீற்றர் தூரம் (2083)

076 739 0413, 077 288 0152


இப்பத்திரிகை வலம்புரி நியூஸ் பேப்பர் (பிறைவேற்) லிமிட்டெட் ஸ்தாபனத்தால் ... முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 25.02.2026 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org